உ

சிவமயம்.



# இளையான்குடித் தலவரலாறு.


தொகுப்பாசிரியர் :

திரு. எஸ். வி. நரசிம்மாச்சாரியார்,

தலைமைத் தமிழாசிரியர்,

இளையான்குடி உயர்நிலைப்பள்ளி, இளையான்குடி.



வெளியிட்டவர் :

திரு. P. சதாசிவஞ் செட்டியார்,

செயலாளர், ஆயிர வைசிய மஹாஜன சங்கம்,

இளையான்குடி.


" வாழ்க! அந்தணர், வானவர், ஆனினம்;
வீழ்க! தண்புனல், வேந்தனும் ஓங்குக;
ஆழ்க! தீயதெல்லாம்; அரன் நாமமே;
சூழ்க! வையகமுந் துயர் தீர்கவே ".

" தில்லை வாழந்தணர்த மடியார்க்கு மடியேன்;
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்;
இல்லையே யென்னாத வியற் பகைக்கு மடியேன்;
இளையான் றன்குடி மாறனடியார்க்கு மடியேன்;
வெல்லுமாமிக வல்ல மெய்ப் பொருளுக் கடியேன்;
விரிபொழில் சூழ் குன்றையார் விறல் மிண்டர்க் கடியேன்;
அல்லிமென் முல்லையந்தார் அமர் நீதிக்கடியேன்;
ஆரூர'னாரூரி' லம்மானுக் காளே. "

— திருத் தொண்டர் தொகை.

O2,3:38.21196.E
N57
112824

| | | |
|---|---|---|
|  |  |  |
| இஷ்டசித்தி விநாயகர். | ஸ்ரீ ஞானம்பிகா சமேத<br>ராஜேந்திர ஜோதீஸ்வரர், | ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத<br>சுப்பிரமணிய ஸ்வாமி. |

உ

# இளையான்றன்குடி மாறனடியார்க்கு மடியேன்.

*மால் அற நேயமும் மலிந்தவர் வேடமும்*
*ஆலயந்தானும் அரனெனத் தொழுமே.*

என்ற சிவஞான போத இறுதிச் சூத்திரத்தின் உண்மையை விளக்குவதாக அமைந்தது திருத்தொண்டர் புராணமாகிய பெரிய புராணம். ஈசன்பால் உள்ள அன்புடைமை ஈசன் அடியவரைக் காணும்போது நிகழும் அன்பின் அளவுபற்றி அறியப்படும்.

"இணைத்துணைத்து என்பதொன்றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்"

என்றார் வள்ளுவனார். அவ்வாறு சங்கம வழிபாட்டிற் சிறந்த நாயன்மார்களுள் ஒருவர் இளையான்குடி மாறநாயனார்.

'மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும் அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்' என்ற குறிக்கோளுடன் வாழ்ந்து ஆண்டவன் சோதனையில் வெற்றிபெற்றவர். அவருடைய வரலாறு யாவருமறிந்ததே. இளையான் குடியிலே

"இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி
**வேளாண்மை** செய்தற் பொருட்டு"

என்ற குறளின் அடிப்படையில் வாழ்க்கை நடத்திய வேளாண் குலத்துதித்த தலைவராய் விளங்கினார். அடியவர் பூசையிலேயே தன் செல்வங்களையெல்லாம் இழந்தார். வறுமையில் வாடியிருந்த ஒரு நாள் மழைக்காலம் நள்ளிரவில் இவர் மனைக்கு இறைவன் தவவேடம் பூண்டு எழுந்தருளினன். வீட்டில் உணவில்லை. மனையாளை வினவினார். 'இல்லதென் இல்லவள் மாண்பானால்! வயலிலே அன்று விதைத்த நெல் முளைகளை வாரிவரச்சொன்னார். அவ்வாறேசெய்தார். விறகில்லை, வீட்டுக் கூரையின் அலக்குகளே விறகாயின. வீட்டுக் கொல்லையில் குழி நிரம்பாத குறும்பயிரைக்கொண்டு கறிவகைகள் சமைக்கப்பெற்றன. அரனடியாரைத் துயிலுணர்த்தினர். அவர் வடிவம் மறைந்து சோதியாய்த் தோன்றி எழுந்தது. விண்ணிலே விடையின்மேல் உமா மகேசுரராகக் காட்சியளித்து

'அன்பனே அன்பர் பூசையளித்த நீ யணங்கினொடும்
என்பெருமுலக மெய்தி ...... இன்பமார்ந்திருக்க'

என்றருள் செய்தனன்.

இறைவன் அடியார்களைச் சோதிப்பது அவர்கள் புகழினை உலகினர்க்கு அறிவிக்கவே. பொன்னைப் புடம்செய்து பிரகாசிக்கச்

செய்வதுபோல வளஞ்சுருங்கினும் மனஞ்சுருங்குதலின்றி அடியார் பூசையாகிய திருப்பணியில் முதிர்ந்த கொள்கையினராயினர்' என்கிறார் சேக்கிழார். இறைவன் நற்றவ வேடம்கொண்டு வந்தது 'ஞாலம் உய்ந்திட' என்கிறார்.

இளையான்குடி என்னும் பதி எதுவென அறிஞர் பலர் ஐயுறுவது உண்மையே. திருநெல்வேலி மாவட்டத்திலும், தொண்டை மண்டலத்திலும் உள்ள பதிகளைப்பற்றி முழு விவரங்கள் தெரியவில்லை. சோழ மண்டலத்தில் திரு நள்ளாற்றுக்கு மூன்று மைல் தூரத்தில் உள்ள பதியில் ஒரு சிவன் கோவில் இருக்கின்றது. அங்கு பிராகாரத்தில் பிக்ஷாடனர் என்று வீற்றிருந்த கோலத்தில் ஒரு உருவமும் அதற்கெதிரில் மற்றொரு சிறு கட்டடத்தில் இளையான்குடி மாற நாயனார், அவர் மனைவியார் இருவருடைய உருவங்களும் இருக்கின்றன. அவ்வூரில் முளைவாரிக்குளம் என்று ஒரு வயலும் உள்ளது. இராமநாதபுரம் வட்டத்தில் பரமக்குடிக்கருகே ஏழு மைல் தொலைவில் உள்ள இளையான்குடி என்ற பதியே இந்நாயனாரின் பதியாக இருக்கலாமென்பதற்குத் தக்க சான்றுகள் இத்தல வரலாற்றில் காட்டப்பெற்றிருக்கின்றன.

சேக்கிழார் பெருமான் தமக்கு ஐயந்திரிபறத் தெரிந்த உண்மைகளைப் பெரிய புராணத்தில் நன்கு விளக்கியிருப்பதைக் காண்கிறோம். இந்த நாயனாரின் பதியைப்பற்றி சேக்கிழார் காலத்தில் நன்கு தெரியாத காரணத்தாலேயே இப்பதி எங்குளது என்று குறிப்பிடவில்லை என்று ஊகிக்கலாம்.

இப்போது இளையான்குடித் தல வரலாறு ஒன்றைத் தக்க தமிழாசிரியரைக்கொண்டு தயாரித்து வெளியிடும் சிவநேயச் செல்வர் **திரு P. சதாசிவம் செட்டியாரவர்கள்** சைவ உலகத்தின் நன்றிக்கும் பாராட்டுக்கும் உரியவராவர். ஆவணி மகம் தோறும் நாயனார் திருநாளைச் சிறப்பாகக் கொண்டாடவும், முளைவாரி யமுதளித்த நாற்றங்காலையும், குறும்பயிர் பறித்த கொல்லையையும், நாயனார் இல்லமென்று கருதப்பெறும் மனையையும், சைவர்கள் பொதுவுடைமை யாக்கி, நாயனார் திருப்பெயரால் பல அறங்கள் செய்யவும், செட்டியாரவர்களும், ஆயிர வைசிய மகாஜன சங்கத்தாரனைவரும் ஆவன செய்வார்களென்று நம்புகிறேன்.

இளையான்குடி மாறனிணையடிகளே சரணம்.

**அ. உத்தண்டராமன்,**
ஹிந்துமத பரிபாலன போர்டுத் தலைவர்,
சென்னை.

உ

மன்னிய வேளாண்டொன்மை இளசை மாறர்
வறுமையினால் உணவுமிக மறந்து வைகி
உன்னரு நள்ளிருள் மழையில் உண்டி வேண்டி
உம்பர் பிரானணைய வயலுழுதுவித்தும்
செந்நெல் முளையமுத மனை அலக்காலாக்கி
சிறுபயிரின் கறியமுது திருந்தச் செய்து
பன்னலரும் உணவருந்தற் கெழுந்த சோதி
பரலோக முழுதாண்ட பான்மை யாரே.

— பெரிய புராணம்.

## கலைமகள் காரியாலயம்

மயிலாப்பூர், சென்னை-4.

அன்புடையீர்,

வணக்கம்.

"இளையான் குடித்தல வரலாறு" படித்துப் பார்த்தேன். பாராட்டக்கூடிய முயற்சி. உங்கள் உழைப்பையும், ஆர்வத்தையும் இத்தகைய செயலில் ஈடுபடுத்தியது சாலச்சிறந்தது.

சென்னை,
24—10—57.

அன்பன்,
**கி. வா. ஜகந்நாதன்.**


# ஆசியுரை.

"என்கடன் பணிசெய்து கிடப்பதே" என்று திருநாவுக்கரசு சுவாமிகளருளியுள்ளதற்கிணங்க, பரமனின் அடியார்கட்குப் பணி செய்வதே திருவுடைமைக்கு ஏற்றதும், தலையாயதுமாய கடமை யாகும். இளையான்குடி மாறனாரின் வரலாறு இக்கருத்தையே வலியுறுத்தி விளக்குகிறது, ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள் திருத் தொண்டர் புராணத்தில் கூறியுள்ள கருத்துக்கள் எண்ணும்தோறும் இன்பத்தையளிக்கவல்லன. வடமொழியிலும் இத்திருத்தொண்டர் களின் வரலாறுகள் சுலோக வடிவில் மிகவும் சுவைபடக் கூறப் பட்டுள்ளன. "சிவபக்த விலாஸம்" என்று ஸ்ரீ ஸ்காந்த உப புராணமாக எழுபத்தொன்பது அத்யாயங்களில் பரமபக்த சிகாமணி யாகிய ஸ்ரீ ஹரசர்ம முனிவர் என்பவராலும், "ஸ்ரீ உபமன்யு பக்த விலாஸம்" என்று உபமன்யு என்ற பரமபக்த சிரோமணியாலும் ஸம்ஸ்கிருத பாஷையில் இயற்றப்பட்டுள்ளமை, அறிஞர் பலரு மறிந்ததே. இத்தகைய இறைவனடியார்களின் பெருமையை மற்றும் சில பேரறிஞர்கள் கீர்த்தனைகளாகப் பாடியருளியுள்ளார்கள் என்றுமறியப்படுகிறது.

"இளையான் குடித்தல வரலாறு" என்ற இந்நூலை வெளியிடும் பணியில் நன்கு ஈடுபட்டு, முயன்று, வெற்றிபெற்றுள்ள, **வித்வான் ஸ்ரீமான் சொ. வேங்கட. நரஸிம்மாச்சாரியார் அவர்களுக்கும்**, தார்மிகர் களும், நற்பண்புகள் நிறைந்தவர்களும், உயர்ந்த நோக்கங்களுக்கு உறைவிடமாகத் திகழ்ந்து வருகின்றவர்களுமான **ஸ்ரீமான் பா. சதாசிவம் செட்டியார் அவர்களுக்கும்**, எல்லாம் வல்ல இறைவன் நீங்காத செல்வம் நிறைந்திருக்கும் வண்ணம் அருள்புரிய வேண்டிக் கொள்கிறேன்.

குளித்தலை,
24—12—57.

வித்யாரத்னகர, பண்டித,
**நடாதூர், ராகவாச்சாரியார்.**



ஸ்ரீ எஸ் வி. நரசிம்மாச்சாரியார்,
மும்மொழிப் புலவர், தலைமைத் தமிழாசிரியர்,
தொகுப்பாசிரியர்.

ஸ்ரீ சதாசிவம் செட்டியார்,
செயலாளர், ஆதிர வைசிய மஹாஜன சங்கம்,
வெளியீட்டாளர்.

உ

# "இளையான்குடித் தலவரலாறு"

" ஞானமொன்றிய மாமுகத்தனை ஞானசற்குரு வேலனை
ஞானமொன்றினை யேகொடுத்திடும் ஞானவம்பிகை யாள்தனை
ஞானமன்னிய ராஜயிந்திர ஜோதியீஸ்வர நாதனை
ஞானமெய்க்குர வன்றனைத்தின நாடியேற்றிடு வாமரோ "

## திருவருள் போற்றும் பெருந்தகையீர் !

அறமே நிலையான பெரும் பொருளெனப் போற்றுவது இப் பாரதப் புண்ணிய நாடு. அதிலும் சிறப்பாகத் தமிழகம், சைவ வைணவ சமயங்களை இரு கண்களாகப் போற்றும் பெருமைவாய்ந்த நாடாகும். இவ்விரு சமய ஸ்தாபகர்களான ஆசார்யர்களும் பெரும் பாலும் தென்னாட்டிலேயே தோன்றியுள்ளனர். உதாரணமாக ஸ்ரீ சங்கரர், ராமானுஜர், மத்வர் எனும் மும்மதாசார்யர்களும், ஆழ்வார்கள் பன்னிருவரும், நிகமாந்த குரு, மணவாள மாமுனிகள் முதலிய வைணவ குருக்களும், உலகமுய்யத் திருவருளின் ஒளியைப் பரப்பிய அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், சம்பந்தர் எனும் நான்மணிக் கோவையும், நாயன்மார்கள் அறுபத்தி மூவரும் தோன்றியமையால் புகழ்வாய்ந்த தென்னாடாகிய தேன் நாட்டிற்கு வடநாடு பெருங்கடன் பட்டுள்ளதென்பது ஒருதலை. அத்தகைய பெரியார்கள் கனியினு மமிழ்தினுமினிய நற்கன்னித்தமிழால் இறைவனையும், அவனடியார் களையும் இறைஞ்சி என்ஞான்றும் வாடாத பாமாலையைச் சூட்டி யிசை பாடிப் பேரிசையைத் தாமும் பெற்றுள்ளனர்.

இத்துணை சிறப்புவாய்ந்த தமிழ்க்கன்னியின் திருநறுந்திலக மெனப் பெரும் புகழைத் தமதாக்கி மிளிர்வது நம் பாண்டியநாடு. பல்லாயிரமாண்டுகளாகக் கடலை யெதிர்த்துப் பொருதும், தீயினையும் ஊழிகளையும் வென்றும் முச்சங்கங்களின் வாயிலாக மூலை முடுக்கு களிலும் முறையுடன் முரசுகொட்டிய முத்தமிழ் முக்கண்ணன் அருளால் முக்காலமும் முன்னணியில் நின்று பெருமை பெறுவதில் வியப்பொன்றுமில்லை.

அப்பெருமை, அனைத்துலகத்தாரின் அகங்களிலும் அலைமோதி நிற்கும் காரணம், அடியார்கள் இம்மொழியை ஆண்டவனிடம் அருள்

பெறுதற்கே பயன்படுத்தி, பொருளைப் பெரிதாக மதிக்காமையேயாம். "நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்; நரகிற்குமிடர்ப்படோம்" என்றெல்லாம் முழங்கச் செய்தது அருள் பற்றிய நினைவே. திருவாதவூரர், பட்டினத்தடிகள்போன்ற பழுத்த சிவனடியார்களின் சரிதங்களும், அவர் பொருட்டாய் அருட்பெருங் கடலும், அனாத ரட்சகனும், உமையொரு பாகனுமான சிவபெருமான் நிகழ்த்தி அருளிய அலகிலாத் திருவிளையாடல்களும் அன்பர் உள்ளங்களை விட்டகலாதவையன்றோ?

இவைபோன்ற சிவபெருமானின் திருவிளையாடல்களைப் பரஞ்சோதி முனிவரின் தெள்ளிய திருவிளையாடற் புராணங்காட்டுவது போலவே, அவனடியார்களின் திருச்சரிதங்களைத் தொகுத்து உலகோருய்யவேண்டி, அருண்மொழித் தேவரெனும் சேக்கிழார் ஸ்வாமிகள் பெரிய புராணமாய் ஆக்கியருளினர். அஃது அடியார் உள்ளங்களுக்கு ஓர் அணையா ஒளியாய்த் திகழ்கின்றது.

அந்நூலில் நான்காவதாக, இளையான்குடி மாறநாயனாரின் சரிதம் இடம் பெற்றுள்ளது. அன்னார், இளையான்குடி என்னும் பதியிலே வேளாளர் குலமணியாய்த் தோன்றி, சிற்றரசாய் ஆட்சி புரிந்து, அடியார்கட்குப் பணிகள் பலவும்புரிந்து, மூவுலகின் புரவலனும் இறைவனையே இரவலனாகப்பெற்று இரவிடையே, இன்னமுதூட்டி, ஈசனருளைப்பெற்று, உலகோருய்ய உபாயங் காட்டியருளியவராவார். "வேளாளரென்பார் விருந்திருக்கவுண்ணாதார்" என்ற பழமொழிக்கு எடுத்துக்காட்டல்லவா அவர்.

இங்கு 'இளையான்குடி' என்று குறிக்கப்படும் பதி எது என்று அறிஞர் பலரும் ஐயுறுகின்றனர். திருநெல்வேலி மாவட்டத்திலும், சோழ நாட்டிலும், தொண்டை மண்டலத்திலும், இந்த இராமநாதபுர மாவட்டத்திலுமாக 'இளையான்குடி' என்ற பெயருள்ள பதிகள் இருப்பதாலேயே மேற்படி ஐயம் ஏற்படுகின்றது. 'சோழ மண்டல சதகம்' 'தொண்டைமண்டல சதகம்' என்றும் நூலாசிரியர்கள் தத்தம் பிரதேசத்திலுள்ளதாகவே இப்பகுதியைக் கூறுவர். ஆனால் அகச் சான்றுகள், புறச்சான்றுகள் பலவற்றை ஆராயுங்கால் பரமக்குடிக்கு வடக்கே ஏழு கல் தொலைவிலிருக்கும் இப்பதியே புராணத்தில் விளக்கப்பட்டுள்ளதாகும் என்று எளிதில் தீர்மானிக்கலாம். இதற்கான பல காரணங்களும் ஈண்டு காட்டப்படுகின்றன.



1. அண்மையில் சிதைவுபட்டுக் கிடைத்துள்ள இந்தத்தல புராணச் சுவடியொன்று, இஃதே அப்பதி என்பதை வலியுறுத்து கின்றது. அதனைச்சிறிது பிழைகளின்றித்திருத்தி இப்பதிப்பினில் வெளியிட்டிருக்கிறோம்.

2. மாறநாயனார் வசித்த திருக்குடிசையும், அடியார்க்கமுது அளித்த 'முளைவாரியமுதளித்த நாற்றங்கால்' என்றதோர் நிலமும், கீரை பறித்த கொல்லையும், அந்நாயனாரின் பல செயல் நிலைகளையும் காட்டும் வகையில் அக்குடிசையில் எழுதப்பட்டுள்ள திருவுருவப் படங்களும் உறுதியை ஊட்டுகின்றன. மேலும் அந்த மாறனாரின் வம்சத்தவர் இன்றும் இங்கு உள்ளனர்.

3. 'மாறன் சடகோபன்' என்ற திருநாமம் பாண்டிய நாட்டில் தோன்றிய நம்மாழ்வாரைக் குறிப்பது போலவும், 'மாறன்' என்ற சொல் பெருவழக்காய் பாண்டியர்களையே குறித்து வந்துள்ளமை யாலும், இந்நாயனார் ஓர் பாண்டிய நாட்டுச் சிற்றரசாயிருந்திருக்கக் கூடுமென்றும் உணரவே இடமுள்ளது.

4. இங்குள்ள சிவாலயத்தில் ஷெ நாயனாரின் திருநட்சத்திர மாகிய ஆவணி மகம் தோறும் முளைவாரியமுதளித்த திருவிழா தொன்று தொட்டுச் சிறப்பாக நடைபெற்று வருவது ஓர் ஆதாரமா கின்றது. இங்ஙனம், பல காரணங்களாலும் உறுதிகொள்ளக்கூடிய ஒரு கருத்தினை யாது காரணத்தாலோ அறியாமல், அண்மையில் அரசாங்கத்தின் ஆதரவுடன் அறிஞர் குழுவால் அச்சிட்டு வெளியிடப் பெறும் கலைக்களஞ்சியத்திலே, 'இவ்வூர் சோழநாட்டில் திருவாரூருக்கு அருகாமையிலுள்ள பதி' என்று குறிப்பிட்டுள்ள கருத்து பரிசீலனைக் குரியது. ஆதலின், அக்குழுவினர் அடுத்த பதிப்புகளிலாவது அந்தத் தவற்றினைத் திருத்திவிடுவார்கள் என்று எண்ணுகிறோம்.

நிற்க, 'அபிதான சிந்தாமணி' என்ற பேரகராதி நூலில் 'இளையான்குடி மாறநாயனார்' என்ற தலைப்பின்கீழ் கொடுக்கப்பட்டுள்ள வரலாற்றுச் சுருக்கம் ஈண்டு, வெளியிடப்படும் மாறநாயனார் புராணத் திற்குப் பயன்படுமாதலின் குறிக்கின்றோம். "இளையான்குடி மாறநாயனார்:— இளைசையம்பதியில் வேளாளர் குலத்தில் பிறந்து, நாடோறும் சிவனடியவர்க்கு அமுதுசெய்து படைத்து நாளுக்கு நாள் வறுமையடைந்தும், ஒழுக்கங் குறைபாதிருத்தலை அறிவிக்கவேண்டிச்

சிவமூர்த்தி, பாதிரவில் வேதியராய் மழையில் நனைந்து, நிற்க இடமில்லாது, அவர் மனைக்கு எழுந்தருளத் தம்பதிகள் இருவரும் கண்டு உபசரித்து, ஈரவஸ்திரங் களைந்து, வேறு தந்து, மனைவியரை அமுதுபடைக்க வினவ, மனைவியார் ஒன்றுமிலாமையைத் தெரிவித்துக் "கொடுப்பாருமில்லை; நாழிகையோ அதிகமாயிற்று; ஆயினும், பகல் கழனியில் விதைத்த நெல்லை வாரிவரின், அமுது சமைக்கிறேனென்ன, அவ்வகையே நாயனார்செய்ய, அடுப்பெரிக்க விறகில்லாமல் கூரையைப் பிடுங்கி அடுப்பெரித்துக் குழிப்பயிரைக் கறியாக்கி அமுது சமைத்து வேதியரை எழுப்ப, வேதியர் ஒரு பெருஞ்சோதி யுருவாயிருக்கக் கண்டு, மயங்கியிருக்கையில், சிவபிரான் ருஷபாரூடராய்த் தரிசனந்தர, முத்திபெற்றவர்." [பெரிய புராணம்]

இவ்வூரின்கண் வேணுகோபாலப் பெருமானின் திருக்கோயிலொன்றும் மிகப் பழமையாயுள்ளது. இவரை சூர்ய வம்ச மன்னனான முசுகுந்தனுக்குப் பிரத்யட்சமான பெருமாள் என்று வரலாறு கூறுவர். இக்கோயில் அண்மையில் புதுப்பிக்கப்பெற்று, ஜீர்ணோத்தாரண. கும்பாபிஷேகாதிகள் நடத்தப்பட்டன. இதில் உள்ள கற்சுவர்களில் பழைய சிலாசாசனங்கள் பலவும் தென்படுகின்றன. அரசாங்கத்தினர் இலாகாவின் மூலம் இவற்றைப் பிரதியெடுத்தும் சென்றுள்ளனர். இப்பதியில் திருமாலின் ஆலயங்களும், சிவாலயங்களும், பற்பல விருந்தனவென்றும், அன்னியராதிக்கத்தாலும் புதிதாக வெட்டப்பட்ட கண்மாயாலும், பலவாலயங்களும் கேட்பாரற்று மறைந்து அருகினவென்றும் தற்போதுள்ள ஆலயங்களே விஞ்சியுள்ளனவென்றும் அறிஞர் கூறுவர். மேலும், பாண்டியர் காலத்தில் பௌத்தர்களும், சமணர்களும் மிக்க செல்வாக்குப் பெற்றிருந்தனர் என்பது வெள்ளிடைமலை. இங்குள்ள சிவாலயத்தின் வாயிற்புறத்தில் பத்மாசனத்தில் சுமார் 4 அடி உயரமாய் ஓர் சமணச் சிலையும் அணி செய்கின்றது. அதன் சக்தியில் நம்பிக்கைகொண்டு வழிபடுவோரும் பலருள்ளனர்.

இங்கு கோயில் கொண்டெழுந்தருளியுள்ள சிவபிரானின் திருநாமம் ஸ்ரீ இராஜேந்திர ஜோதீஸ்வரர் என்பதாம். அம்மனின் திருநாமம் ஞானம்பிகை. இங்குள்ள திருமாலின் கோயில் மிகப் பழமையானதே. அதில் எழுந்தருளியுள்ள வேணுகோபால மூர்த்தியின் திருநாமம் "நின்று குழலூதும் விண்ணகரத் தெம்பெருமானாகிய



திருக்கையமர்த்தும் திருநாராயண நெடியகரிய மாணிக்க மரகத மதன வேணுகோபாலப்பெருமாள்" என்று கல்வெட்டிலிருந்து தெரிகிறது. சூர்யவம்ச மன்னனான முசுகுந்த சக்ரவர்த்திக்கு தவத்தினால் ப்ரஸன்னராகி தீராத நோயை நீக்கி வரங்கள் அளித்தவர் என கர்ண பரம்பரைச் செய்தி கூறுகின்றது. அண்மையில், இவ்வாலயத் திருப்பணியின்போது பல பல அழகிய பழமைவாய்ந்த விக்ரகங்களும் பூமியினடியிலிருந்து கண்டெடுக்கப்பட்டன. அவற்றுள் ஸ்ரீனிவாஸன், காளிங்க நர்த்தன கோபாலன் இவ்விரு விக்ரகங்களும் குறிப்பிடத் தக்கவை.

மேலும், இத்தலத்தில் மிக்க வரப்ரசாதினியான 'வாள்மேல் நடந்த அம்மனின்' திருவாலயமும் உள்ளது. பொதுமக்கள் 'வாழ வந்தாளம்மன்' எனத் திரித்து வழங்குகின்றனர். இவ்வம்மனை, சுற்றுப்புறத்து மக்களனைவரும் சமய வேறுபாடின்றி வேண்டி வழிபடுவது காணத்தக்க காட்சியாகும். மற்றும் நல்லூரார், முனியசாமி முதலிய கிராம தெய்வங்களின் மூர்த்திகளும், தீர்த்தமும் சிறந்து விளங்கும் இத்தலம், பலவகைகளிலும் சிறப்புற்றிருப்பதை விளக்கப் பற்பல சான்றுகளுமுண்டு.

இவ்வெளியீட்டில், இளையான்குடி மாறநாயனாரின் வரலாற்றுச் சுருக்கமும், சேக்கிழாரருளிய புராணமும், அதன் பொழிப்புரையும், ஓலைச்சுவடியில் கிடைத்த, தல வரலாறும், வேதாந்தமடத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ சிவானந்தஸ்வாமிகள் அருளிய தல புராணமும், பல கவிதைகளும் இடம் பெற்றுள்ளன. பழமையும், புதுமையும் தொகுக்கப்படும் ஒரு சிறு முயற்சியே யிஃது.

கொடையாலும், ஈசனடியார்த் தொண்டாலும் புகழ்வாய்ந்த இப்பதியிலே, ஆவணி மகந்தோறும் நாயனார் திருநாளை விமரிசையாகக் கொண்டாடுவது மட்டுமின்றி, பதியின் பெருமை மங்காமல் நாயனார் அடிச்சுவட்டை உலகறிந்து உய்யும் வண்ணம் அன்னாரின் திருநாமத்தைத் துணைகொண்டு பல அறிவகங்களையும் ஏற்படுத்திப், பணிபுரிதல் சிவநேசச் செல்வர்களின் சீரிய கடனாகும். அன்னதானத்தால் உயர்வு பெற்ற வேளாளர் தம் குடியைப் பெருமைப்படுத்திய நாயனாரை மறத்தல் நலன் தருமோ?

இந்நூலைச் சிறிய அளவிலேனும் வெளியிட விரும்பியும், ஊக்கந்தந்தும், உடலாலும், பொருளாலும் உதவியும், முயன்றவர் சிறப்பாக இவ்வூர் ஆயிர வைசிய மஹாஜன சங்கத்தின் காரியதரிசியும், இளைஞரும், தெய்வப்பணியே பிறவிப் பயனென்று கருதுபவருமான நண்பர் **திரு. P. சதாசிவஞ் செட்டியாரவர்கள்.** அன்னாரது ஊக்கமும், முயற்சியுமே தேவாலயங்களில் பலவித முன்னேற்றங்கட்கும் முழுக் காரணமாயுள்ளன. அவர்க்கு இறைவன், நீண்ட ஆயுளையும், பல்வகை நலன்களையும் நல்க வேண்டுகின்றோம். அவ்விதமே, இப்பணியில் முழுவதும் ஈடுபாடுகொண்ட **திரு. செ. கோபாலனையும்** மறப்பது தவறாகும்.


நிற்க, இப்பணியைத் துணிவுடன் துவக்கிய எனக்கு இழுக்கல் உள்ளவிடத்து ஊன்றுகோல்போல் நின்று, தம் ஆற்றல்மிக்க அறிவுரைகளாலும், கவிதைகளாலும் உதவியவர் இவ்வூர் வேதாந்தமடத் தலைவர் **ஸ்ரீலஸ்ரீ சிவானந்த ஸ்வாமிகளேயாவார்.** அன்னாரது கவிதைகளைக் காண்பவர் சைவாகமம், தீந்தமிழிலக்கியம் முதலியவற்றில் ஆழ்ந்துள்ள மேதா விலாஸத்தையும், பக்திப் பெருக்கையும், கவிதையின் இனிமையையும் காண்பார் என்பதில் ஐயமில்லை. அன்னாரின் கைம்மாறு கருதா வுதவிக்கு யாமென்றும் கடன் பட்டுள்ளோம்.

இந்நூலை, பற்பல அலுவல்களினிடையே அழகாக அச்சிட்டுத் தந்த பரமக்குடி ராயல் அச்சகத்தார்க்கும் எம் நன்றி உரியதாகுக. ஆசியுரை தந்தருளிய பெரியோர்கட்கு எமது வணக்கம்.


இங்ஙனம்,

**எஸ். வி. நரசிம்மாச்சாரியார்,**
தலைமைத் தமிழாசிரியர்.

இளையான்குடி.
5-10-1957.



இளையான்குடி மாறனார் மூல விக்ரகம்.



இளையான்குடி மாறனார் சந்நிதிகள்.

உ

# இளையான்குடி மாறனாரின்

## வரலாற்றுச் சுருக்கம்.

---

வைகையாற்றின் வடகரையில் பரமக்குடிக்கு ஏழு கல் வடக்காக இளையான்குடி என்னும் ஓர் பதியுளது. ஒரு காலத்தில் அப்பதி ஓர் வில்வ வனமாய்த் திகழ்ந்தது. நாரத முனிவருடன் பூவுலகை விமானத்தில் சுற்றிக் கண்டுவந்த தேவேந்திரன் அன்னாரின் அறிவுரைப்படி ஒவ்வோர் திசையிலும், ஒவ்வோர் யோசனை விஸ்தீர்ணமுள்ள சிறந்த நகரமாக்கி நல்லூரார் என்ற சாஸ்தாவை ப்ரதிஷ்டை செய்து, தேவதீர்த்தம், ராஜேந்திர ஜோதீஸ்வரர், திருமதி ஞானாம்பிகை முதலிய மூர்த்திகளையும் ப்ரதிஷ்டை செய்வித்து, அனுக்ரஹம் பெற்றுச்சென்றான். பல காலமும், ஸ்தலமிது பெயர்பெற்று, மக்களுக்கெல்லாம் வரங்களைத் திருப்தியாக அளித்து வந்தது.

ஒருகால், ரோமபாத மஹர்ஷியானவர், தனக்கேற்பட்ட ஸ்திரீஹத்தி தோஷத்தை இவ்வூர் தேவதீர்த்தத்தில் நீராடியமையால் நீங்கப்பெற்றவராய், ராஜேந்திரஜோதீஸ்வரரை சாக்ஷாத்கரித்து சாயுஜ்யமடைந்தார். இப்பதியில் வீற்றிருக்கும் வேணுகோபாலப்பெருமானை முசுகுந்த மன்னன் வழிபட்டு வரங்கள் பல பெற்றான். இவ்வரலாறுகளை யறிந்து ஸூர்ய வம்சத்தைச் சேர்ந்த 'கோச்சடையப்ப வள்ளல்' என்ற மன்னவன், ஸந்தான பாக்யம் வேண்டிப் பல பல தீர்த்தங்களையும் திவ்யத் தலங்களையும் அணுகி இறுதியில் சோமசுந்தரக் கடவுளின் ஆணை பெற்று இவ்வூரினை அடைந்து நீராடி வழிபட்டு நின்றான். அவனது தவத்தினால் உளங்கனிந்த ராஜேந்திரர் சோதிவடிவாய், உமையொரு பாகனாய் காட்சி தந்தருளினார். இஃதிங்ஙனமிருக்க, கைலாயத்தின்மீது விமானத்தில் சஞ்சரித்த தேவேந்திரன், பார்வதி தேவியுடன் பரமன் ஏகாந்தமாயெழுந்தருளியிருந்த திருக்கோலத்திற்கு விக்னம் விளைவித்தானென்று, அவனைப் பூமியில் கோச்சடையப்பனுக்குப் புதல்வனாய்த் தோன்றுமாறு சபித்தார்.

அச்சாபங் காரணமாக, தேவேந்திரன், தன்னால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட நல்லூர்ப் பதியில் கோச்சடையப்பனுக்குப் புத்திரராய் அவதரித்து, நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக

வளர்ந்து கல்வி கேள்விகளில் தேர்ச்சியுடன் 'இந்திராதித்தன்' என்ற திருநாமம் பெற்று விளங்கினான்; தக்க பருவத்தில் ஆட்சியைச் செங்கோல் தவறாது ஆண்டுவருகையில், நாரதாதியர்களின் வேண்டுகோட்படி தேவலோகத்தில் தேவர்கட்கு அசுரர்களாலேற்பட்ட துயரத்தை நீக்க, தேவவிமானமேறிச் சென்றான். அரக்கர்களை யழித்து ஸத்யலோகம், வைகுந்தம், கைலாயம் எங்கும் சென்று த்ரிமூர்த்திகளையும் தரிசித்து, வெற்றிவீரனாய் அனுக்ரஹம்பெற்று தன்னகர் திரும்பினான். பின்னர், நல்லூர், அமராவதிபோல் மிகவும் அழகாய் விஸ்தரிக்கப்பட்டு 'இந்திராவதார நல்லூர்' என்று யாவராலும் போற்றியழைக்கப்பட்டது. மன்னன் 'த்ரிபுவன சக்ரவர்த்தி' என்றும் அழைக்கப்பட்டார். நாடும், நகரமும் பிணியற்று, மாதம் மும்மாரிபெய்து வளம் மிக்கிருந்தது. அம்மன்னவன் அந்தணர்களின் அருளாலும், இராஜேந்திர ஜோதீஸ்வரரின் கடாட்சத்தாலும் மணிகள் போன்ற பல புதல்வர்களைப் பெற்றெடுத்தனன். பின் அவன் சந்ததியினர் பல்லாயிரம் ஆண்டுகள், இந்நகரை ஆண்டனராக, இறுதியில், பாண்டியர்களின் உறவு முறையினராகக் காராளர் குடியில் ராஜேந்திரன், மாறன், கருத்தரித்து முடிதரித்தான் என்ற மும்மணிகள் தோன்றி மூன்று இராஜ்ஜியங்களையாண்டு வந்தனர். அவர்களில் மாறன் என்பவரோ, உருவில் மாரன்போல் விளங்கி, இந்திராவதார நல்லூரை ஆண்டு, பெரும் புகழெய்தினார். அன்னார் தமது செல்வம் முழுவதையும் சிவபிரானின் அடியார் திறத்தே சோடசோபசாரங்கள் செய்வதிலும், உணவு, உடை முதலியன ஈதலிலுமே செலவழித்து வந்தார். இப்படியிருக்கையில் அன்னாரின் சிவபக்தியை நித்தியமானதென்று உலகிற்குக் காட்டியருளத் திருவுளம் பற்றினான் திரியம்பகன். மாறனார் அடியவர்களுக்கெல்லாம் தன் இல்லாளுடன் நல்லமுறையில் இன்னடிசில் அளித்து வருகையில், அவரது செல்வம் நாடோறும் குன்றத் தொடங்கியது. அன்றாடம் உண்டிக்கும், அன்னக்காவடி சுமந்தும், அடியார்க்கெனவே தன்னையும், தன் பொருட்களையும் கடன் வயப்படுத்தியும் முயற்சிதளராது வாழ்ந்துவந்தனர். நல்லதோர் கார்காலம். அன்னார் கொஞ்சம் செந்நெல் விதைகளைத் தன் நாற்றங்காலில் விதைத்து வந்தார். கதிரவன் சாயுங்காலம் வீட்டையடைந்தார். எங்கும் இருள் சூழ்ந்தது. அன்று மனைவியாரும், தானுமாகப் பட்டினியுடன் சிவத்தியானத்திலீடுபட்டு அப்படியே கண்ணுறங்கினர். (மையாகவே எங்கும் மழை பொழிவதுபோல் தோன்றிற்று. உடல்



வாழியிந்திர சோதி யீஸ்வரன்
வாழி யாயர் குலப்பெரு மாயவன்
வாழி வேலனொடு மெய்ஞ்ஞானவம்பிகை
வாழி மாறனிசை வையமெங்கணும் (3)

பைந்நாகத் திருவணையிற் கண்ணுறங்கும் மாயவனும்
கைந்நாகக் கதி தந்தான் அவுணன் கோனுரங்கீண்டான்
மைந்நாக நிகர்ப்புயத்தான் மெய்யன்பருள முறைவான்
மின்னார் திருமங்கையுறை மார்பன் நம் சரணே. (4)

பாரதத் தென்புலத் திலகமாம் சென்னை
தாரணிக் கணியெனப் புகழிளையான்குடி
தோரண மாயிரம் மாளிகை மாடமுன்
வாரணம் மாலுடன் சூழ நல்வளமுறும் (5)

இரவு கருத்ததோர் மையிருள் வையம்
பரவிட விண்ணிழி முகிலின மெங்கும்
தரணி யதிர்ந்திடு மிடியின் கடுமொலி
திரளொளி மின்னலும் ஊழியை யொத்தன.
சரண மறிந்திலாச் சரமசரங்களும்
வரமருள் வருணனின் வழிதனை நாடின
புரரிபு, மதிநதி சடையிடைக் காத்தவன்
வரகுண னிளைசையூர் மாறனை நண்ணினன் (6)

நண்ணிடு தவமிகுஞ் சிவனடியார்தமை
விண்ணிழி மழையிடை யெதிரது கொண்டார்
புண்ணிய நான்முறை யுபசரணை பல
திண்ணிய வுளவளம் தோன்றிடச் செய்வார் (7)

எண்ணிய யாவையும் படைத்துப் புரந்திடும்
நுண்ணிய பெரியோன் உமையொரு பாகன்
மண்ணில மாண்புறு மிளையான்குடிப் பதித்
தண்ணருண் மாறனார் திருக்குடி யேகினன். (8)

மின்னலொளி யென்னுமொரு துன்னு மழகாளன்
மன்னுமுயிரின்பமுற மாறனை யெரித்தோன்
கன்மமுதற் சன்மமெலா நீங்க வகையுள்ளப்
"பன்னரிய பண்புறை நன் மாற! பசி" யென்றான். (9)

செல்வமெலாம் அடியார்க்கும், எளியோர்க்கும் தந்தே
வல்வினைகள் பரனருளால் மாய் வனபோல் மறைய
அல்லுணவு மற்றமையால் அரும்பசியோ டுறங்கும்
நல்லியலாள் தனை நண்ணித் தாதனிலை தானவில்வாள். (10)

"விருந்தினன் பெருந்தவன் கடும்பசி களைவான்
அரும்பொருள் நடுவிருள் நல்குவர் இலரே
மருவிலா மனமுடை ஐய! நண்பகல்
திருநிலம் விதை பொருள் கொணர்க" வென்றனளே. (11)

காரிருள் குறிவழிப்போய்ப் புலத்திடை மிதக்குஞ்சாலி
வாரியே கூடையிட்டு விரைவினில் மனையே புக்கார்
மாரியில் நனைந்த மேனி யன்பெனுந் தழலால் காயப்
பாரியாள் கைத்தலத்தில் பரிவுடன் அதனை யீந்தார். (12)

கூரையின் முகட்டுக் கட்டை யிந்தன மாக்கி யன்னார்
கீரையைக்குழிகள் தேடிப்பறித்து நற் கறிகளாக்கி
பாரையாள் பரமதேவன் பாங்குட னமுதுசெய்யக்
காரையேய் வண்கரத்தான் மாறனாரழைக்கலானார். (13)

மறைந்த பங்குறை மங்கையும், கங்கையும்
நிறைந்த வெண்மதி சூலமான் மழுவும்
மறைபுகழ்ப் பரம்பொருள் இடபமு மூர்ந்தே
இறைவனோர் இன்னருட் காட்சியைக் காட்டினன். (14)

"அன்புநிறை தம்பதிகாள்! என்னடியார் திறத்தன்பை
என்புருக வினிது கண்டும், காட்டிடவும் வேடமுற்றேன்
துன்ப மெலா மகற்றினிநீர் 'இயக்கபதி' வரவேற்க
என்சலோகம், சாயுச்யம் இன்பமுடன் பெறுகவென்றான். (15)

வானவர் மாமலர் சொரிந்தனர் போற்ற
மாநகர் வானளா யின்னியங்க ளார்த்த.
தானமுடன் தர்மவகை தழைக்க, மும்மாரி
மானவரும் பெற்றிடவே மாறனார் ஆண்டார். (16)

சீருலாவு நற்சொர்க்க நாதனூர்த் தவமிகுந்தநற் காச்யபன்
பேருடைத்திரு நைத்ரவன் புகழ்முனிவரின் வழித் தோன்றினோன்
சாருநுண்கலை வல்லுனர் பதம்மேவிடும் நரசிங்கனும்
சாரமாற சரித்திரந்தனை யீசனேற்று வகுத்தனன். (17)

சிவமயம்.

# இளைசையம்பதித் தலபுராணம்.

தேவாதிகட்கெல்லா மதிபதியாம் தேவேந்திரன், மிக்க வொளியுடன் விளங்காநின்ற திருவத்தாணி மண்டபத்திலே, சப்தமகர்ஷிகளும், கின்னரர், கிம்புருடர், கந்தர்வர், சித்தர் வித்யாதரர், ஏனைய திக்பாலகர், சப்த கன்னிகையர், நாரதமுனி, வியாஸமுனி, வாமதேவர், சுகமுனிவர், நவக்கிரகங்கள் முதலாம் முப்பத்து முக்கோடி மஹனீய தேவர்களும் புடைசூழ, தேவ துந்துபி முழங்க, ரம்பை, ஊர்வசி, மேனகை, திலோத்தமை முதலிய தேவமாதர், பரதநாட்டியம் பயில, கொலுவிருந்தவனாய் சபையிலே வீற்றிருந்த மஹான்களைப் பார்த்து வினவாநின்றான்.

"முனீந்திரர்களே! பூலோகத்தினிலே, மனு முறை தவறாமல் தேவாலயங்களும், பிரும்மாலயங்களுமுண்டுபண்ணி,தேவதாவிச்வாசம் குன்றாமல், ராஜ்ய பரிபாலனம் பண்ணிவந்த பேரரசர்களைப்பற்றியும், பூலோகத்திலுள்ள சிவாலயங்கள், விஷ்ணுவாலயங்கள் மற்றுமுள்ள தேவாலயங்கள், புண்யநதி தீர்த்தங்கள் பற்றியும் அவற்றுள் மிகவும் முக்கியத்துவமுள்ள தேவாலயங்கள் நதி புண்ய தீர்த்தங்களைப்பற்றியும் திருவாய் மலர்ந்தருள வேண்டும். இவற்றை சிரவணம் செய்தல் மஹாபுண்ய வினையாகும்" என்றனன்.

அதனைக்கேட்ட நாரத முனிவர், சொல்லுவார்; வாருமையா தேவேந்திர மஹாராஜனே! சொல்கிறேன்; கேளும் என்று கூறத் தொடங்கி,

"பூலோகத்தில் சூர்யவம்ச ராஜாக்களினிடை சக்ரவர்த்தியாயிருந்து, மனுமுறையும் தேவ விச்வாசமும் மறவாமல், ராஜ்ய பரிபாலனம் பண்ணி ஈச்வர கருணாகடாட்சம் பெற்று, சகல தேவர்களும், குற்றேவல் புரிய சாயுஜ்ய பதவியடைந்துள்ள மஹான்களும் பலருண்டு. இன்னும், பூலோகத்துள்ள தலங்களில், பல முக்கிய தீர்த்தங்களுமிருக்கின்றன. அவ்வோ தீர்த்த விசேடங்களின் சிறப்புக்கள் நம்மால் விரித்துச் சொல்லவொண்ணாதவை" என்றருளினார்.

அவ்வருளிச் செயலைச் செவியேற்ற தேவாதிபன் சந்தோஷம் மிக்கவனாய் நாரத மகாமுனிவரைக் கூட்டிக்கொண்டு விமானமேறி, பூலோகம் வந்தடைந்து, ரதத்திலேறிக்கொண்டு, பூமியிலுள்ள புண்ய நதீ தீர்த்தங்களில் நீராடி, சிவாலயங்களும், விஷ்ணவாலயங்களுமணுகி, தரிசித்து வரும்போது, உத்தரபூமி கடந்து, தட்சிண பூமி நோக்கி ரதத்தைச் செலுத்தி வருகையில், திருக்கூட்டப்பதியில் வந்து (திருக்கோட்டியூர்) தீர்த்தமாடித் திருமாலைத் தியானித்து வழிபட்டுத் தரிசித்துப் புறப்பட்டனர். பின்பு நந்திகேச்வரர் பட்டணமும் (காளையார்கோவில்) பிரவேசித்து, அங்கு யானை மடுவில் தீர்த்தமாடி, காளைமாலிங்கத்தைத் தரிசித்துக்கொண்டு, தெற்கு முகமாய் வரும்போது 'பாலாறு' எனும் நதியின் கரையையணுகுகையில், நாரத மகாமுனிவரைத் தேவேந்திரன் பார்த்து, "ஸ்வாமின்! இந்நதி எந்நதியாம்? இதன் வர்த்தமானத்தைச் சொல்லுக" என்று கேட்க, நாரதர் சொல்லத் தொடங்குவார்.

"முன்னொரு காலத்தில், மகாவிஷ்ணுவும், சிவபிரானும் இந்தத் தலத்தில் திருவிளையாடல்கள் புரியுங்கால் மகாவிஷ்ணு தேனாறு ஒன்றை அழைப்பித்தார். அதற்கு மாறாகச் சிவபெருமான், பாலாற்றை யழைத்துக் காட்டிப் பல கோடி வத்ஸாங்களிங்கேயே எழுந்தருளியிருந்தபடியாலே, இதற்குப் 'பாலாறு' என்றும் பெயரேற்பட்டது. ஆகையால், இந்நதியில், தீர்த்த மாடினாலும், இதன் கரையில் தேவாலயங்கட்டி வைத்தாலும் பிறவாமை யென்னும் நிதியையும் பெறுவாரென்றும், நாரதர் கூறினார். அதனைக் கேட்ட தேவேந்திரனும், பாலாற்றில் தீர்த்தமாடி தென்முகமாய் ரதம் விட்டுக் கொண்டு வரும்போது, பாலாறு நதிக்கரையிலிருந்து, வைகை நதியின் வடகரை தொடுத்து, யோசனை தூர விஸ்தீர்ணம் நாற்றிசைகளிலும், பரந்து, அடர்ந்து கூவிள விருட்சமயமான ஆரண்யம் காணப்படவே, தேவேந்திரன் அளவிலா ஆச்சர்ய மடைந்து, ரதத்தைவிட்டுக்கொண்டு வர, அவ்வாரண்யத்தின் மத்தியில் ரதத்தைப் பூமி பிடித்துக்கொண்டு விட, ரதம் போக வியலாமல் நின்றது. அந்நிலையில், தேவேந்திரன் என்ன காரணமோ? என்று யோசித்து, இங்கு "அதிசயம் ஏதாகிலு முண்டோ" என்று ஒருயோசனை தூரத்தை நாற்றிசையிலும் கூர்ந்து கவனிக்கையில், எங்கும் வில்வ விருட்சங்களே காணப்பட்டன வல்லாமல், மற்றொன்றும் காணவில்லை. அப்போது, தேவேந்திரன்,



கறுத்துவிடுமே என்றஞ்சிப்போலும், மக்கள் வெளியே தலைகாட்டாமல் பதுங்கியுறங்கிவிட்டனர்.) எங்கும் அமைதி; இடிமுழக்கமும், சோவென்ற பெருமழையும் அவ்வமைதியைக் குலைக்கத் தொடங்கின. 'பளிச்' 'பளிச்'சென்று மின்னல் கீற்றுக்கள் வருண பகவானின் சீற்றத்தைப்போல் பாரெங்கும் பரவின. இந்நிலையில், யாரோ குடிசை வாயிற் கதவைத் தட்டியழைக்கும் சத்தம் கேட்கவே, 'சாம்ப சதாசிவ, சாம்ப சதாசிவ, சாம்ப சதாசிவ சாம்ப சிவோம்' என்ற கம்பீரமான தோத்திர வொலியும், தம்பதிகளை விழிப்புறச்செய்தன. மாறனார், விரைந்து வாயிற்கதவைத் திறந்து எதிரே ஈர ஆடையுடன் நின்ற சிவப்பழத்தைக் கண்டார். அடிகளில் விழுந்து வணங்கினார். உள்ளே அழைத்துச்சென்று, அர்க்கியம், பாத்யம், ஆசமனீயம், மதுபர்க்கம் முதலிய உபசாரங்களைச்செய்து, திருமேனியை உலரச்செய்து ஆடையை மாற்றியுடுப்பித்தார். குறிப்பினால் அடியவரின் நிலையுணர்ந்து, அன்னாரை மேடையில் சயனித்திருக்கச் சொல்லி அகமுடையாளருகிற் சென்று அடியார்க்கு அமுது படைக்க என் செய்வது? என்று வினவினார். வழியொன்று மில்லாமையை யுணர்ந்த அவ்வில்லாள், அன்று பகலிலே விதைத்துவந்த நெல்லைப் பொறுக்கி வரவேண்டினள். கொட்டும் மழையிலே பெரும் கூடையொன்றைத் தலையில் கவிழ்த்துக்கொண்டு, அக்காரிருளில் கண்களுக்குப் புலப்படாத வழியை அடையாளங்களால் தடவித் தடவிச் சென்றுத் தனது நிலத்தை நண்ணினர். முழங்காலளவு மழை நீரில் அன்று விதைத்த நெல் விதைகளை அரித்தரித்து, கூடையிலிட்டுச் சிறிது நேரத்தில் மகிழ்ச்சியுடன் தன்மனை திரும்பினர். கொழுநனின் வழியில் விழி வைத்து நின்றிருந்தாள் காரிகை. விரைவில், அவ்விதைகளைப் பெற்று 'விறகில்லையே' என்று யோசிக்கலானாள். கவலையை யறிந்த மாறனார் குடிசையின் மேலிருந்த அலக்குகளை விறகாய் அறுத்துக் கொடுக்க, அதனுதவியால் தீமூட்டி ஈர நெல் விதைகளைப் பக்குவமாய் வறுத்துக் குத்தி அரிசியாக்கி அமுது தயாரித்தனள். அதற்குக் கறிவேண்டுமென்று எண்ணிய மாறனார் கொல்லைப் புறத்தில் குழிகளும் நிரம்பிடாத கீரை முதலியவற்றைப் பறித்து வந்தார். அவற்றையும் பலவகைக் கறிகளாகச் சமைத்திட்டாள். அமுது தயாரானவுடன் அடிகளாரை அழைக்க வரவே, உறங்குபவர் போன்றிருந்த அவ்வடியார், சோதிப் பிழம்பாய் இடபத்தின்மீது அம்மனுடன் காட்சியளித்து மாறனாரை நோக்கி யருளினார். "அப்பனே! இதுகாறும் நீ பெற்றிருந்த சைவ

பக்தியையும், கொடைச் சிறப்பையும் உலகத்தாருக்குக் காட்டவே இவ்வடிவில் தோன்றினோம். கொடையிலும், பக்தியிலும் எக்காலத்தும் குன்றாத உன் குடிசையின் காரணமாக இவ்விந்திராவதார நல்லூர் இனி 'இளையான்குடி' என இனிய நாமம் பெறுவதாகுக. இழந்த செல்வங்களையும் பெற்று இம்மையில் இன்பந்துய்த்து மனைவியுடன் மறுமையிலும் மாட்சிமைமிக்க என் பதத்தையடைகையில் குபேரன் உங்களை எதிர்கொண்டு அழைப்பான். பேரும் புகழும் நீடூழி பெறுவீராக!'' என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தனர். தேவதுந்துபிகள் முழங்கின. விண்ணவர் மலர் மாரி பொழிந்தனர். நீண்டகாலம் மாறனார், செங்கோல் செலுத்தினார் என்பதாம்.

---

உ

ஸ்ரீ :||

*இந்த்ராவதார புரபத்ரம் ஸதாமெபி தேஜோவிசுத்தமமலம்*
*தேவேந்த்ரமுக்ய ஸுரபூஜ்யம் புராண மதிபக்தானுகம்பன பரம்.*
*ஜ்யோதிஸ் ஸ்வரூப பரமானந்த வாஸமனு ஜாதஸ்ய தாமஸததம்*
*ஜன்மாதி பந்த வினிவ்ருத்யை பஜேமஹி ஜகதாம் ததாது குசலம்.*

## பொழிப்புரை.

'இந்திராவதார நல்லூர்' எனும் இப்பதிக்கு எக்காலத்தும் நலம் பயப்பவரும், மாசற்ற, தூய ஒளி வடிவானவரும், தேவேந்திரன் முதலாய தேவர்களால் வழிபடப்பெற்றவரும், மிக்க பக்தியுள்ளோரைக் காப்பதில் கருத்துள்ளவரும், பேரின்பமும், சத்தியமுமே வடிவாயுள்ளவரும், இளையபெருமாளென்னும் இலக்குமணனாலாக்கப் பெற்ற குடிசையெனும் இப்பதியின் தலைவருமான சிவபிரானை எமது பிறவித் துயர்போன்ற பந்தங்கள் ஒழிய வழிபடுகின்றோம். அன்னார், உலகிற்கு மங்களத்தையருளுக.

*சீராருந் திருமதிள் சூழ்த்திருவிளையான்குடிப்பதியே*
*தீராத விருவினையும் தீர்த்து நலம்பல தருவான்*
*ஏரார்ந்த கண்ணி யசோதை யுளம் உவப்பிப்பான்*
*நாராயணனே யினிதுறையும் திருமகளின் பதியாம்.* (1)

*மாலும் திருமகளும், மாதொரு பங்கெம் மானும்*
*சாலும் நகரிது காண் சான்றோர் தமக்கெனவே,*
*மேலும் பிறர்க்குதவி பல்வகையும் நல்கு மினம்*
*நாலும் நலம்பெறவே நாடுமிளை யான்குடியே.* (2)



நாரதரைக்கண்டு," முனிவரரே! ஈதென்ன அதிசயம்? ஒரு யோசனை தூரம், நான்கு திசைகளிலும் வேறொரு விருட்சமுமின்றி, வில்வ விருட்சங்களேயுள்ளன. மத்தியில் நம்முடைய ரதம் ஆழ்ந்து நிற்கின்றது. ஆச்சர்யமாயுள்ளதே! இஃது ஏன்? என்று கேட்க, தேவர்ஷி கூறுவார்:— ''கேளுமையா! தேவேந்திர மஹாராஜனே! நீவிர் தீர்த்தமாடிய பாலாறு நதியின் அருகாமையில் ஈச்வரன் அனேக கால பர்யந்தம் வாசம் பண்ணியமையாலே ஒரு யோசனை விஸ்தீர்ணம் பூமி முழுவதும், வேறு விருட்சங்களின்றி, வில்வ விருட்சங்களாகவே யிருக்கின்றன. இங்கு ரதமும் பதிய மாட்டாமல் நிற்கிறது. ஏனென்றால், நீர் இப்பூவுலகிற்கு வந்து புண்ய நதீ தீர்த்தங்களாடி, சிவ விஷ்ணுவாலயங்களையும் தர்சித்து, தேவலோகம் திரும்பிச் செல்லுமுன், இவ்வுலகிற்குத் தெரியும்படியாக, இவ்விடம் ஒரு நதீ தீர்த்தமுண்டுபண்ணி, விஷ்ணுமூர்த்தி, சிவலிங்கங்களையும் பிரதிஷ்டை பண்ணிவைக்க வேண்டியே, பூமி தேவியானவள் உமது ரதத்தைப் பிடித்துக்கொண்டிருக்கின்றாள். தீர்த்தமும், சிவலிங்கமும் விஷ்ணு மூர்த்தியும் ப்ரதிஷ்டை, செய்விக்கப் பூமி தேவி, உமது ரதத்தை உடனே விட்டுவிடுவா''ளென்று கூறினார்.

அந்த வகையே, தேவேந்திரனும், நல்லகார்ய மீதென்று கருதி, முப்பத்து முக்கோடி தேவதைகளையும் தருவித்து, நல்லதோர் முஹூர்த்தத்தில் சுபதினத்தில் புண்யதீர்த்தமுண்டுபண்ணி ஹரிஹர புத்திரனும் சாஸ்தாவை ப்ரதிஷ்டை செய்வித்து அன்னாருக்கு 'நல்லூருடைய'வரென்று நாமகரணம் செய்து, அத்தீர்த்தத்திற்கு 'தேவதீர்த்தம்' என்று நாமகரணமிட்டு, தீர்த்தக்கரையில் சிவலிங்காதி பிரதிஷ்டை செய்வித்து, **'ராஜேந்திர ஜோதீஸ்வரர்'** என்று நாமதேய மிட்டு தீர்த்தத்தில் தேவேந்திரனும், நாரத முனிவரும் நீராடி, முப்பத்து முக்கோடி தேவர்களும் தீர்த்தமாடி சுவாமி தர்சனஞ்செய்து நிற்க, ராஜேந்திர ஜோதீஸ்வரரும் உமையொருபாகனும், பரிவாரங் களுடன், சகல தேவர்கட்கும் கண்களுக்கினிய காட்சியை வ்ருஷபாரூடராய்த் தந்தருள, சந்தோஷ பரிதர்களான தேவேந்திரனும், நாரதரும், ஏனைய தேவர்களும் தேவலோக மெய்தினர்.

இப்பால் பூமியில், அடியார் குழாத்தினால் அலங்கரிக்கப்பெற்ற 'நல்லூர்' நகரமெனும் இப்பட்டினத்தில், பல பல புண்ணியச் செயல் களும், அல்லும், பகலும் அபிவிருத்தி யடைந்து வந்தன. வர்ண

தர்மங்களும், ஆச்ரம தர்மங்களும் இடையறாது வளரலாயின. அங்ஙனமிருக்க, ஏதோ ஒருவகையில் ஸ்த்ரீஹத்தி தோஷத்தால் பிடிக்கப்பட்ட ரோமபாத மஹர்ஷியானவர், பல சிவ ஸ்தலங்களையும் தரிசித்து, பல புண்ய தீர்த்தங்களுமாடி, மதுரையம்பதியில் ஸ்ரீ சுந்தரேச்வரக் கடவுளைத் தரிசித்தும், பொற்றாமரைத் தீர்த்தத்தில் ஆடியும் காத்திருந்தார். அப்போது சுந்தரேசக் கடவுள், அசரீரியின் வாயிலாக ரோமபாத ரிஷியைப் பார்த்து "நீவிர் நல்லூரடைந்து, தேவ தீர்த்தத்தில் நீராடிப் பின்பு நல்லூருடையாரைத் தரிசித்து, ராஜேந்திர ஜோதீஸ்வரரையும் வழிபட்டால், ஸ்த்ரீஹத்தியிலிருந்து விடுபடுவீர்" என்றருளினார்.

அவ்விதமாக, சுந்தரேசக் கடவுளின் கருணைக் கட்டளைப் படிக்கே நல்லூரினை நாடவே, நல்லூருடையார் தம்மிடம் காத்திருக்கும் ரோமபாதரைப் பார்த்து "இனி நீர் தேவதீர்த்தமாடி, அங்கு ராஜேந்திர ஜோதீஸ்வரனைத் தரிசியும்" என்றருள, அவரும் தீர்த்த மத்தியில் நீராடி நின்று தியானித் திருக்கவே, ஸ்த்ரீஹத்தி, தீர்த்தத்தின் வடகரையிலேயே நின்றுவிட்டது. ரோமபாதர் அதனைத் திரும்பிப் பாராமலே ராஜேந்திரரைக் கண்டு பல படியாக ஸ்தோத்ரங் களைச் செய்து, ப்ரதக்ஷிணம் செய்து ஸாஷ்டாங்கமாய் வணங்கி, தரிசித்து அவ்வாலயத்துக்குத் தென்பாரிசத்தில் ஓர் தீர்த்த முண்டாக்கி, சிவலிங்கப் பிரதிஷ்டை செய்வித்தும், 'ப்ரஸந்நமான ஸேச்வரர்' என்று திருநாமமும் சூட்டினார். பின்னர் பல நாட்க ளிருந்து ஸேவை புரியவே சிவபிரானின் கடாட்சம்பெற்றுச் சாயுஜ்ய பதவியடைந்திட்டார்.

இப்பால் சிலநாட்கள் செல்ல, உத்தர பூமியில் அரசாண்டு வந்த மதிருகன சக்ரவர்த்தியின் குமாரன் கோச்சடையப்பனுக்குப் புத்திர சந்தானமின்றி, அனேக தானதர்மங்களைப் பண்ணியும், சிவாலயம், பிரும்மாலயம், விஷ்ணு வாலயங்களைக் கட்டியும், தடாகங் களை யுண்டு பண்ணியும், நந்தவனங்கள் அமைத்தும், சந்தான மேற்படாமையால் தவவேடங்கொண்டு, தீர்த்த யாத்திரை செய்து வந்தார். வழியிலே, பல ஆரண்யங்களையும், பர்வதங்களையும் கடந்து, **கவிச்சாந்தி** மடுவிலிருந்து தவம்புரியாநின்ற சவுண்டலீக மாமுனிவரின் ஆசிரமத்தை யணுகி, யவ்விடம் சவுண்டலீக முனிவர்க்குப் பல பணி விடைகளும் செய்துவந்தார். சில நாட்களில் தயவுமிக்க அம்முனிவர்



"வாரும், கோச்சடையப்ப வள்ளலே! நீர் நம்மிடம் காத்திருக்கும் காரணம் யாதோ?" என்று கேட்க, அப்போது நடந்த வர்த்தமானங் களைக் கூறி "புத்திர பாக்கியம்பெற மார்க்கம் அருள வேண்டும்" என்று பிரார்த்தித்தான். அதற்குச் சவுண்டலீகர் கூறுவார்; "புத்திர சந்தானம் வேண்டுபவர், மஹிமை வாய்ந்த புண்ணிய நதிக்கரை, தீர்த்தக் கரைகளில் நீராடி, சிவாலயங்களுள்ள தலங்களில் சென்று, விடாமல் சிவத்தியானம் செய்து தவம்புரிய வேண்டும். அங்ஙனம் தவம்புரிவோர்க்கு ஈசன் ஸந்தான பாக்கியம் அருளுவான்" என்று திருவாய் மலர்ந்தருளினார். அதனைக்கேட்டு மகிழ்ந்த கோச்சடையப்ப வள்ளலும் அம்முனிவரிடம், "சுவாமி, முக்கியமான தீர்த்தமும், சிவத்தலமும் கூறினால், தேவரீரது ஆணைப்படி நடந்து கொள்கிறே" னென்று வேண்டினான். அதற்கவர், "கேளீர், கோச்சடையப்ப வள்ளலே! தட்சிண தேசத்தில் யானை மடுவும், காளை லிங்கமும், நந்திகேச்வரப் பட்டணமுமிருக்கின்றன. அவற்றிற்குத் தென்புறமாக பாலாறு என்னும் நதியும், அதற்கும் தெற்கே 'நல்லூர்' என்றொரு பட்டணமும், தேவதீர்த்தமும், ராஜேந்திர ஜோதீஸ்வர லிங்கமும் பல திருமால் மூர்த்திகளுமிருக்கின்றன. அந்தத் தலத்திற்குப்போய் தேவதீர்த்தத்தில் நீராடி, அதன் கரையில் தவம் பண்ணினால், ஈச்வரன் ஸாந்நித்யமாகி, புத்திர பாக்கியத்தை யருளுவார்" என்றார்.

அங்ஙனமே, சவுண்டலீகரின் உபதேசம் பெற்ற கோச்சடை யப்பன் நல்லூரடைந்து, தேவதீர்த்தத்தில் தீர்த்தமாடி, அத் தீர்த்தக் கரையின் ஈசான்ய திசையில் ஈச்வரனைத் தியானித்துத் தவம் செய்வதில் ஈடுபட்டான். இப்பால், தேவாதிராஜன் தேவலோகம் விட்டு கைலாஸ பர்வதத்தைச் சார்ந்துள்ள புண்ய நதீ தீர்த்தங்களில் ஆடி வரவேண்டுமென்று ரதம் விட்டுச் சென்று, பல தீர்த்தங்களிலும் ஆடி வருகையில், அவ்வோ விடங்களிலுள்ள அதிசயங்களைக் கண்டு, மிக்க சந்தோஷத்துடனே புறப்பட்டு கேசர மார்க்கமாய் இரதம்விட்டு வருகையில், கைலாயகிரியிலே பரமேஸ்வரியும், பரமேஸ்வரனும் அந்தரங்கமாய் சல்லாபித்து மகிழ்ந்திருக்க அந்த ரதத்தின் ஓசை கேட்ட பார்வதி தேவி திடுக்குற்று, பராங்முகமாக அந்நிலைக்குக் காரணத்தை ஞான திருஷ்டியால் கண்டறிந்த பரமேஸ்வரன் ஆகாயத்தைக் கடாட்சிக்க அங்கிருந்து ரதம் விட்டிறங்கி தேவேந்திரன் எதிரே வந்தான். அவனைப் பார்த்துப் பரமசிவன் விசனத்துடன் "நீ பூவுலகின் நடுவே நரனாகப் பிறக்கக்கடவை" என்று சபித்தார்.

அதுகேட்ட தேவேந்திரன் மிகவும் பயந்து, தெண்டனிட்டு, "சுவாமி, அடியேனுக்கு இச்சாப விமோசனம் எப்போது? அருளுக; வகை யாது? என்று வினவினான்.

அதற்குப் பரமசிவன், "இந்திரனே! பூலோகத்தில் பல நாட்களாக நல்லூரில் தேவதீர்த்தக் கரையில் நம்மை நோக்கி 'கோச்சடையப்பன்' என்னும் அன்பன் புத்திர பாக்கியம் வேண்டித் தவம் செய்து வருகின்றான். அவனுக்கு அருள் செய்ய வேண்டி உன்னை அவனுக்குப் புத்திரனாகக் கட்டளையிடுகிறோம். பூலோகத்தில் அவனுக்குப் புதல்வனாய்த்தோன்றி ஸஞ்சரித்து, தர்ம மார்க்கத்தையும் அடியாரின் பெருமையையும் நிலைநாட்டிப் பின்பு தேவலோகம் வந்தடைவாயாக" என்று அருளினார். அஃதங்ஙனமாக, இப்பால் பூலோகத்தில், நல்லூரிலே தேவதீர்த்தக் கரையில் தவம் செய்து கொண்டிருந்த கோச்சடையப்ப மன்னன் தன் தவம் முடிந்து நிற்க, அவரெதிராகப் பரமசிவன், காலகண்ட த்ரிநேத்ரராய், ஈஸ்வரி சமேதராய், வ்ருஷபாரூடராகி ப்ரஸன்னமானார். அந்தக் காட்சியைக் கண்டதும் தன்னிலை மயங்கிய கோச்சடையான், அஷ்டாங்கங்களும் அவனியில் படுமாறு தெண்டன் ஸமர்ப்பிவித்தும் அனேக ஸ்தோத்திரங்களைக் கூறியும் நின்றான். அப்பொது ஈச்வரன், "வாரும் பிள்ளாய்! கோச்சடையப்பனே! நீவிர் வேண்டிய வரம் யாது? கேளும்" என்றருள "சுவாமி! அடியேனுக்குப் புத்திர ஸந்தான மருள வேண்டும்" என்று வேண்டிக்கொண்டானாக, ஈசனும், "நல்லது; ஆகட்டும், பிள்ளாய்! உமக்குப் புத்திரப்பேறு அருளினோம். புத்திரன் தோன்றி சக்கரவர்த்தியாக, மூவுலகுகளையும் ஆட்சிபுரிவான்" என்று கட்டளையிட்டு, கைலாயத்துக் கெழுந்தருளினார்.

அப்பால், சிவசாபங் காரணமாகத் தேவேந்திரன் பூலோகத்திற்கு வெள்ளையானையாம் ஐராவதத்தின்மூலம் வந்திறங்கி, கோச்சடையப்ப மன்னனின் தர்மபத்னியான தர்மாவதியின் கருவில் தோன்றி, நல்லதோர் சுபதின முஹூர்த்தத்திலே, புருஷ ஸந்ததியாய் ஜனிக்க தேவதுந்துபிகள் முழங்கின; வானவர்கள் மலர்மாரி பொழிந்தனர். தேவமாதரும் நடனம் புரிந்தனர். அழகிற்சிறந்த அக்குமாரனைக் குலகுருவுடன் கண்டுகளித்த கோச்சடையானும், அவன் மனைவியாளும் இந்திராதித்தனென்று நாமகரணம் செய்வித்து அன்னப்பிராசனம், சௌளம், உபநயனம் முதலியன யாவும் முறைப்படி முடித்தனர்.



அத்தவப் புதல்வனும், நாளொருமேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து,வளர்பிறை மதியன்ன வளருங்கலைகள் யாவும்பெற்றனன். சிறிது சிறிதாக, அரசர்கட்கான முறையில் நான்கு வேதங்கள், ஆறு சாஸ்திரங்கள், நூற்றெட்டு உபநிடதங்கள், அறுபத்தி நான்கு கலைகள், யானை யேற்றம், குதிரை யேற்றம், ரத சாரத்யம், ஆயுதப் பயிற்சி முதலிய யாவுங்கற்று பட்டாபிஷேகம் செய்விக்கப்பெற்று, சகல ராஜ்ய பாரங்களையுமேற்று பூலோக தேவேந்திரன் எனப் புகழ்ப் பெயர் சூடி மனுநீதி முறை தவறாமல், வேதசாஸ்திர மார்க்கங்களைப் பரிபாலித்து ராஜ்யத்தில் செங்கோல் செலுத்தி வருகையில், தேவாதியர்கள் இந் நல்லூர்ப் பட்டினத்திற்கு, 'இந்திராவதார நல்லூர்' என்று பெயரிட்டும் அவ்வரசனுக்கு 'இந்திராதிசேகர மஹாராஜன்' என்னும் பெயர் இட்டும் அழைத்தனர்.

பின்னொருகால், இங்ஙனே இந்திராதித்தன் மஹனீயமாய் ஆட்சி புரிந்து வருகையில், தேவலோகத்தினை அசுரர்கள் ஆக்ரமித்து சுக்ரருடன் சூறைபாடி யெங்கும் சஞ்சரித்து பயங்கரமான யுத்தத்தைத் தொடுத்து, நிலையின்றி தேவலோகமெங்கும் வியாபித்துக் கொள்ளவே, அங்கிருந்து நாரத முனிவர் பூலோகத்திற்கெழுந்தருளி, கோச்சடையப்ப மாமன்னனின் குமாரனான இந்திராதிசேகர மஹாராஜன் திருவத்தாணி மண்டபத்திற்கு வந்துசேர, அம்மன்னன் நாரத முனிவரை யெதிர்கொண்டழைத்து அர்க்யம், பாத்யம், ஆசமனீயம் முதலான ஷோடசோபசாரங்களையும் செய்து அரிமானணையில் அமரச்செய்து கவரிகள் இருபுறமும் வீசி, தெண்டனிட்டு வணங்கி, "சுவாமி! இன்றே அடியேன் மகாபாக்கியவானானேன்; என் ஜன்மம் இன்றே சாபல்யம் பெற்றது; தேவரீர் எழுந்தருளிய காரியத்தினை நியமித்தருள்க" என்றான். அஞ்சலிபந்தம் செய்து நின்றுவேண்டிய அவ்வரசனிடம், நாரத மகாமுனிவர் சொல்வார்; "கேளும் பிள்ளாய்; இந்திராதி சேகர மஹாராஜனே! நீவிர் நீடூழி ஆசந்திரார்க்கம் வாழ்க. இதற்கு முன் பூலோகமாண்டு வந்த சூர்யவம்ச ராஜாக்களும், சந்திர வம்சத்தார்களும் மனுநீதிதவறாமலும், வேதசாஸ்திர முறைப்படியும் தேவவிஸ்வாசங்கொண்டு ஆண்டு வந்த அம்சத்தினாலும், தேவர்களுக்குப் பலவித உபசாரங்களையும் செய்து வந்த அம்சத்தாலும், இறுதியில் தேவேந்திரபட்டினம் பெற்று வந்தனர். இப்பொழுது, நீவிர் செங்கோல் தவறாமல் ஆட்சி புரிவதாலும், தெய்வபக்தி கொண்டிருப்பதாலும், நுமது உபகாரத்தை நாடியணுகினோம்.

தற்போது, தேவலோகாதிபதியான தேவேந்திரன், ஈச்வரனது கட்டளைப்படி இவ்வுலகில் உமது உருவத்தின் அவதரித்தமையால், தேவலோகத்தை சுக்கிராச்சாரியாரின் தலைமையிலே அசுரர்கள் ஆக்ரமித்து அவதிப்படுத்துகின்றனர். தேவர்கள், தேவகன்னியர், சப்தரிஷிகள் முதலியோர், இம்சை தாங்காது தவிக்கின்றனர். ஆதலின், நுமது சௌர்யமும், பராக்ரமமும், பெரும்புகழும் கேட்டு, தேவலோகத்தின் இடுக்கண்ணைச் சூர்யவம்ச மன்னர்கள் போல், போக்கி அனுக்ரஹம் பெறவீரென வந்தேன்'' உமது தோற்றமே, தேவேந்திரனின் அம்சமென்பதை வெளிப்படுத்துகின்றது. உடனே நீவிர் இந்திரலோகம் வந்து இடுக்கண் நீக்கி அமரர்களை ஆட்கொள்ள வேண்டுமென்று நாரதமுனிவர் ஆக்ஞாபித்தார்.

அதனைக்கேட்ட இந்திராதிசேகரன்; வினயத்துடனே, "முனீந்திரரே! பரமேச்வரனின் கருணை கடாட்சத்தாலும், சகல தேவதைகளின் அனுக்ரஹத்தினாலும், தேவரீரது ஆசீர்வாதத்தினாலும் சர்வ அசுரர்களையும் சம்ஹாரம் செய்துவைத்து, தேவராஜ்யத்தை மறுபடியும் நிலைநாட்டுகின்றேன்; அசுரர்களின் ஸம்ஹாரம் முடியும் வரையில், தேவரீர் எனது தேர்த்தட்டிலிருந்துகொண்டு, அசுரர்களின் மாயைகளை அடிக்கடி தெரியப்படுத்திக்கொண்டிருக்க வேண்டுகின்றேன்''. என்று விண்ணப்பித்து, தன் புரோஹிதரை யழைப்பித்து, நல்லதோர் முஹூர்த்தம் பார்க்கச்செய்து, தானைகளையுமெழுப்பிக் கொண்டு, நாரதரையும் தேர்த்தட்டிலே யமரச்செய்து, புறப்பட்டு, முரசங்கள் முழங்கத் தேவலோகம் போய்ச்சேர்ந்து, தன் பராக்ரமத்தால் மாயாவிகளான அசுரர் கூட்டத்தை அடியோடழித்து, வெற்றி மாலை சூடிநின்றான்.

அப்போது, ஸமஸ்த தேவர்களும், தேவகன்னிகைகளும், சப்த ரிஷிகளும், திக்பாலகர்களும் நவக்கிரஹங்களும், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும், கற்பக மலர்களைத்தூவ, தேவதுந்துபிகள் முழங்க, அரம்பை, ஊர்வசி, திலோத்தமை, மேனகை முதலியவர் பரத நாட்டியமாட, சப்த கன்னியர்களு மாலர்த்தி யேந்த, கின்னரர், கிம்புருடர், வித்யாதரர், யட்சர், முதலியவர் வாழ்த்திப்பாட நாரதருடன் சத்தியலோகஞ்சென்று, பிரும்மதேவனின் ஆசியைப் பெற்று, கைலாயஞ்சென்று, பார்வதி நாயகனின் அருள் நோக்கும் பெற்று ஸ்ரீ வைகுந்தத்திலே பரமபத நாதனால் அனுக்ரஹம் ஏற்றும்



சகல தேவதைகளும் புடைசூழ, மகாவிஷ்ணுவின் சக்ராயுதமும்பெற்று 'த்ரிபுவன சக்ரவர்த்தி' என்ற நாமதேயமிடப்பட்டவனாய்த் தன் நகர் திரும்பினான்.

பின்பு, தன் 'இந்திராவதார நல்லூரை'யும் 'அமராவதி'யென்ற தேவேந்திர நகர் போலாக்க விரும்பி, திசைக்கு ஒரு யோசனை வீதம் நான்கு யோசனை விஸ்தீர்ணமுள்ளதான பட்டணத்தை யழகாய்த் தெய்வத்தச்சனும் விச்வ கர்மாவின் மூலம் நிர்மாணிக்கச் செய்தான். அதனுள், கோட்டை, கொத்தளங்களும், மாட மாளிகைகளும், கூட கோபுரங்களும், உப்பரிகைகளும் ரத்தினோஜ்வலமாய் நிர்மாணித்து, ஒவ்வோர் தெருவுக்கும் சிவாலயம் ஏழும், விஷ்ணுவாலயம் மூன்றும், என்றிவ்விதமாக இருநூற்றி யிருபத்தி நான்கு சிவாலயங்களும், நூற்றெட்டுத்திருப்பதிகளுமாக வானளாவிய பொற்கலசங்களுடன் விளங்கும் ஸந்நிதானங்களை ப்ரதிஷ்டை செய்வித்து, நகரில் பிராம்மண க்ஷத்திரிய, வைச்ய, சூத்ரர் எனும் நான்கு வர்ணத்தாரும், நான்கு ஆச்ரமிகளும் குறைவின்றி வர்ணாச்ரம தர்மங்களில் தாழ்வு ஏற்படாமல் ஒழுகி வரச்செய்து நாளும் செங்கோலோச்சினான்.

அப்பட்டனத்தின் கோட்டைகளைச் சுற்றிலும், அகில், காரை மா, சந்தனம், சாம்பிராணி, குங்குமம், பலா, தேக்கு, புன்னை, மகிழம், பாரிஜாதம், தென்னை, கமுகு, வாழை, எலுமிச்சை, நார்த்தை, வில்வம், முதலிய பலவகை தருக்களும், முல்லை, மல்லிகை, இருவாட்சி, சம்பகம், மனோரஞ்சிதம், ரோஜா முதலிய திவ்ய மலர்ச்செடி கொடிகள் நிரம்பிய நந்தவனங்களும், தாழ்வின்றி செங்கழுநீர் ஓடை, தாமரைத் தடாகங்களும், வெண்டாமரை, அல்லி, ஆம்பல், கருநெய்தல், வெண்நெய்தல் முதலிய மலர்களும் மலர்ந்திருக்க, அந்நகரின் விழாக்களில் காட்சி காணவரும் தேவ கன்னிகையரும், ரம்பை முதலானோரும் இந்திராவதார நல்லூரின் அலங்காரங்களையும், வளமை பொருந்திய நிலப்பகுதிகளையும் நீர் நிலைகளையும் கண்டுகளித்து, "நமது அமராவதியும், இதற்கு ஈடாமோ?'' என்று எண்ணி வியந்து, சுகந்த பாரிஜாதாதி மலர்களை யாவலுடன் எடுத்துச்சென்று தரித்துக் கொள்வார்களாம். இவ்வாறு, திரிபுவன சக்ரவர்த்தியான இந்திராதிசேகரன் நீண்டகாலம் வரை ராஜ்ய பரிபாலம்செய்து, திரும்பவும் தனக்குரிய அமராவதி நகரை இறுதியில் அடைந்தனன்.

இதன் பின்னர், அவனது சந்ததியிலுண்டான பல அரசர்களும் சீரும் சிறப்பும் கொண்டு, அவ்விராஜ்யத்தை நீதி தவறாமல் ஆண்டு வந்தனர். மாதம் மும்மாரி மழை பெய்ததுடன் நீர் வளமும், நில வளமும் பெற்று மக்கள் மகிழ்வடைந்திருந்தனர். இவ்விதமாக அனேகம் அரசர்கள் ஆண்டு சென்றபின்னர், இந்திராவதார நல்லூரில் காராளர் வம்சத்திலே ராஜேந்திரன், மாரன், கருத்தரித்து முடிதரித்தான் என்று மூன்று குமாரர்கள் தோன்றினர். அவர் மூவரும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகக் கல்வியிலும், கேள்வியிலும், வளர்ந்து, மேதக்கபண்பினராய் ஒழுகி வரலாயினர். அம்மூவரும் அரசியல் வசதியை வேண்டி, இந்திராவதார நல்லூரில் மாறனும், மேல் பாரிசம் என்னும் நகரில் ராஜேந்திரனும், வடமேல் மூலையில் கருத்தரித்து முடிதரித்தானுமாகப் பிரித்துத் தனித் தனியே செங்கோலோச்சி வந்தனர்.

இந்நிலையில், இந்திராவதார நல்லூரையாண்ட மாறன், அன்னக் கொடி கட்டிக்கொண்டு, அதிதி, பரதேசிகளுக்கும்; சிவனடியார்கட்கும் மற்றும் வரும் விருந்தினர் அனைவர்க்கும், அவரவ ரிச்சைக்கேற்ப அன்ன பானாதிகளை யளித்தும், பலவித உபசாரங்களைச் செய்தும், மகிழும் நாளிலே மாறனாரின் சிவபக்தியை யுலகிற்குக் காட்ட வெண்ணிய சிவபெருமானது சோதனையால் நாடும், நகரமும் வறுமை குடிகொண்டு, வானம் பொய்க்க, தம் பொருளனைத்தையும் அடியார் படுதுயர் தீர்ப்பான் செலவிட்டு, வறுமையையே செல்வமாக மனமுவந் தேற்றார் மாறனார். அவர் தம் இல்லாளும், நிழல்போல் மாறாக்கருத்தினளாய், மாறனாரையே பின்பற்றி யடியார்களின் தொண்டுகளைச் செவ்வனே புரிந்து வந்தாள்.

—

அந்த க்ஷாம காலத்தில் ஒருநாள் நள்ளிரவில் காரிருளிடை பெருமழையுஞ் சூழ, சோதனை புரிய விரும்பிய உமையொருபாகன், வேதியன் வடிவுடன் தோன்றி, உணவினை வேண்ட, வழியறியாத தம்பதிகள் மிக்க கவலையுடன் வழிகண்டு, அன்றைப் பகலிலே விதைத்த விதை நெல்லைப் பொறுக்கிக் கூடையிலிட்டுக் கொணர்ந்தும், விறகிலாமையால் வீட்டுக் கூரையைப் பிரித்து எரித்தும் ஈர நெல்லைப் பதமாக்கி அன்னமாக்கியும், கொல்லையில் முளைத்திருந்த குழிக் கீரைகளைப் பிடுங்கிக் கறி சமைத்தும், விருந்தினரை உண்பிக்க, உறக்கத்திலிருந்து எழுப்பினர். எழுப்பவும், ஆங்கு வந்திருந்த வேதியர் உருமாறி



காலகண்டத்ரி நேத்ரராய் மானும், மழுவும் ஏந்தி மாதொரு பாகனாய்ப் பரிவார தேவதைகளும், ஏனைய குருமார்களும் புடைசூழப் பிரசன்னமாய், வ்ருஷப வாஹனனாகக் காட்சி யளித்து "விருந்தினர் கண்டு இளையாத மனங்கொண்ட பேரடியாரின் குடி" என்ற பொருளில் இனி இந்த இந்திராவதார நல்லூர், 'இளையான்குடி' என்ற பெயருடன் விளங்குக என்று ஆசிகூறி மாறனாரின் மெய்யன்பை உலகுக்குணர்த்தி, 'இறுதியில் குபேரன் முதலியோர் குற்றேவல் புரியுமாறு என் சாயுச்யத்தை வந்தடைக' என்று அருள் புரிந்து மறைந்தனர். இவ்வாறு பல நாட்கள் இம்மையில் பேரும், புகழும் பெற்று அறம் பல புரிந்து, மறுமையிலும் மாசிலா மனத்தினராய் மாண்புறு பதம் பெற்ற மாறனாரின் சரிதம் கேட்டு மகிழ்வோர் அவனருள் பெறுவர்.

திருச்சிற்றம்பலம்.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

அருண்மொழித்தேவர் என்னும் ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள் அருளிச்செய்த

# பெரிய புராணம் எனும் திருத்தொண்டர் புராணம்

# *4-வது இளையான்குடி மாறனார் புராணம்.*


வித்வான் திரு. எஸ். வி. நரசிம்மாச்சாரியார் அவர்கள்
[இளையான்குடி உயர்நிலைப்பள்ளித் தலைமைத் தமிழாசிரியர்] எழுதிய

பொழிப்புரையுடன் கூடியது


*வெளியிட்டோர்:*
திரு. P. சதாசிவம் செட்டியார் அவர்கள்,
செயலாளர், ஆயிர வைசிய மஹாஜன சங்கம், இளையான்குடி.


## இளையான்குடி மாறநாயனார் புராணம்.

தொகை

**" இளையான்றன் குடிமாற னடியார்க்கு மடியேன் "**
**திருத்தொண்டத் தொகை**

*இளையான் எனும் பெயர் கொண்டுள்ள குடி அல்லது இளையானது குடியில் தோன்றிய மாறனுக்கும், அவரது அடியார்க்கும் அடியவனாவேன் ... என்பதாம். இளையான்குடியை, இளையான்றன் குடியென்றும் வழங்குவதுண்டு.*

வகை

*" இயலா விடைச் சென்ற மாதவர்க் கின்னமு தாவிதைத்த*
*வயலார் முளைவித்து வாரி மனையலக்காக் கால் வறுத்துச்*
*செயலார் பயிர்விழுத் தீங்கறி யாக்கு மவன் செழுநீர்க்*
*கயலா ரிளையான் குடியுடை மாறனெங் கற்பகமே "*
*— திருத்தொண்டர் திருவந்தாதி.*

*பஞ்ச காலத்திலே, விருந்தினராக வந்த வேதியர்க்காகவென்று முதல் நாள் இனிய அமுதிற்கென்று நிலத்திலே விதைத்து வந்த விதைகளை வாரிக்கொண்டுவந்து, வீட்டுக்கூரை அலக்கை விறகாக்கி வறுத்து, புன்செய்க் குழிகளில் முளைத்திருந்த சிறு கீரை முதலிய வற்றை இனிய கறிபாகச் சமைத்து விருந்தோம்பும் இளையான்குடி மாறநாயனார், அடியார்கட்குக் கற்பக தருவைப்போல் நினைத்தவற்றைத்*



*தருபவராம். மேற்படி இரண்டு தொகை, வகைகளை மூலமாகக் கொண்டே விரித்தெழுதியவர் சேக்கிழார் சுவாமிகளாவர்.*

## இளையான்குடி மாறநாயனார் புராணம்.

*அம்பொனீடிய வம்பலத்தினி லாடுவாரடி சூடுவார்*
*தம்பி ரானடி மைத்திறத்துயர் சால்பின் மேன்மை தரித்துளார்*
*நம்பு வாய்மையி னீடுசூத்திர நற்கு லஞ்செய் தவத்தினா*
*லிம்பர் ஞாலம் விளக்கி னாரிளை யான்கு டிப்பதி மாறனார்.* 1

*அழகிய பொன்னால் வேயப்பெற்று நீடிய சிற்றம்பலத்திலே யாடும் நடராசப் பெருமானின் திருவடிகளை எப்போதும் தலையால் தாங்குபவரும், நம்பிக்கைக்குரிய சிறந்த வேளாளர் குலத்திலே தவங் காரணமாக அவதரித்து இந்நிலவுலகினை விளங்கச் செய்தவருமான இளையான்குடிப்பதி மாறனார் சிவனடிமையால் உயர்ந்த சால்பு கொண்டு விளங்கி வந்தார்.* (எ.ம்)

*ஏரின்மல்கு வளத்தி னால்வரு மெல்லை யில்லதோர் செல்வமும்*
*நீரின் மல்கிய வேணி யாரடி யார்தி றத்து நிறைந் ததோர்*
*சீரின் மல்கிய வன்பின் மேன்மை திருந்த மன்னிய சிந்தையும்*
*பாரின் மல்க விரும்பி மற்றவை பெற்ற நீடு பயன் கொள்வார்.* 2

*ஏர்த் தொழிலால் நிறைந்துள்ள வளங்கொண்டு பெருகும் உணவுப் பொருளும், அவற்றினால் கிடைக்கும் அளவற்ற பொருட் செல்வமும், கங்காதர தேவனின் அடியார்கள் திறத்தில், மிக்க சிறப்புள்ள அன்புகொண்டு, அவ்வன்பின் பெருமை உலகில் திருந்தும் படி, நிலைபெற்ற மனத்துடன் செல்வம் பெற்ற பயனை விரும்பிப் பெற்று வந்தார்.* (எ.ம்)


112824


*உழவால் கிட்டும் செல்வத்தினை அடியார்கட்கே செலவிட லானார்.* (எ.று)

*ஆர மென்பு புனைந்த வையர்த மன்ப ரென்பதோர் தன்மையா*
*னேர வந்தவர் யாவராயினு நித்த மாகிய பத்திமுன்*
*கூர வந்தெதிர் கொண்டு கைகள் குவித்து நின்று செவிப்புலத்*
*தீர மென்மது ரப்பதம் பரி வெய்த முன்னுரை செய்தபின்.* 3

*ஆரமாய் எலும்புகளை யணிந்த சிவபிரானின் அன்பரென்னும் ஒரே காரணம்பற்றி நேரில் வந்தவர் யாராயினும் நிலைபெற்ற பக்தியுடன்*


O 83:37.8117 E
N57

அன்னார்களை எதிர் கொண்டழைத்து, கைகுவித்து வணங்கி நின்று செவி குளிர, இனிய மொழிகளை அவர்கள் அன்பு கொள்ளுமாறு கூறுவர். (எ.று)

கொண்டு வந்து மனைப்பு குந்து குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலி னாத னத்திடை வைத்த ருச்சனை செய்தபின்
உண்டு நாலு விதத்தி லாறு சுவைத்தி றத்தினி லொப்பிலா
வண்டர் நாயகர் தொண்ட ரிச்சையி லமுது செய்ய வளித்துளார். 4

அடியார்களைத் தமது மனையினுள் அழைத்துச் சென்று புகுந்து, அழகிய அடிகளை நீரால் விளக்கி, மிக்க ஆர்வத்துடன் ஆசனத்திலமரச்செய்து, அர்ச்சனை செய்து, நான்கு வகையான உண்பன, தின்பன, நக்குவன, குடிப்பன என்ற முறையில் அறுசுவை உணவுகளையும், தன்னிகரற்ற அடியார்களின் இச்சைக்கேற்ப அமுது படைத்து வந்தார். (எ.று)

ஆளு நாயக ரன்ப ரானவ ரளவிலாருள மகிழவே
நாளு நாளு நிறைந்து வந்து நுகர்ந்த தன்மையி னன்மையா
னீளு மாநிதி யின்ப ரப்பு நெருங்கு செல்வ நிலாவி யெண்
டோளி னாரள கைக்கிருத்திய தோழ னாரென வாழுநாள். 5

எல்லாவுயிர்களையும், தமது ஆட்களாகக்கொண்ட இறைவனின் அன்பர்கள் அளவிலாது, மகிழ்வுடன் நிதமும் கூடிவந்து, இவர் இல்லத்தில் அமுதுசெய்து அன்பினை அனுபவித்த தன்மையினால், நீடித்த பழஞ்செல்வங்களும், தான் தேடிய பெருஞ் செல்வங்களும், மேன் மேலும் பெருகவே, சிவபிரான், அளகாபுரியை ஆள நியமித்த அவரது தோழனாகிய குபேரன் போன்று வாழ்ந்து வந்தார். (எ.று.)

செல்வ மேவிய நாளி லிச்செயல் செய்வ தன்றியு மெய்யினால்
அல்ல னல்குர வானபோதிலும் வல்ல ரென்றறி விக்கவே
மல்ல னீடிய செல்வ மெல்ல மறைந்து நாடொரு மாறிவந்
தொல்லை யில்வறு மைப்ப தம்புக வுன்னி னார்தில்லை மன்னினார். 6

தில்லைக் கூத்தரசாம் சிவபிரான், இம்மாறனார், செல்வம் மிக்க காலத்திலே மட்டுமின்றி, மெய்வருத்தம் மிகத்தரும் தரித்திர நிலை வந்துற்றபோதும், இம்மாதிரி அடியார்க்கு அறச் செயல்கள் பலவும் புரிய வல்லவர் என்ற உண்மையை உலகிற்கு உணர்த்த வேண்டியே, செழித்த செல்வங்கள் அனைத்தும் மெல்ல நாடோறும் மறைந்து, பின் வறுமைநிலை, விரைவில் வரும்படி திருவுள்ளம் பற்றினார். (எ.று.)



இன்னவாறு வளஞ்சு ருங்கவு மெம்பி ரானிளை யான்குடி
மன்னன் மாறன் மனஞ்சு ருங்கு தலின்றி யுள்ளன மாறியுந்
தன்னை மாறி யிறுக்க வுள்ள கடன்க டக்கன கொண்டுபின்
முன்னை மாறி றிருப்ப ணிக்கண் முதிர்ந்த கொள்கைய ராகினார். 7

இவ்வகையில், தம் செல்வங்கள் குறையவும், எம் தலைவனும் இளையான்குடிப்பதித் தலைவனுமாகிய மாறனார், சிறிதும் உள்ளஞ் சுருங்காது, இருக்கும் பொருட்களைக் கைமாற்றியும், தன்னிலையை மாற்றி யடிமை யாக்க வல்ல கடன்களைப் பெற்றும், மேன்மேலும் முன் செய்ததுபோலவே ஒப்பற்ற அடியார்களின் பணியில், முதிர்ந்த நிலை யுடன் செயலாற்றி வந்தார். (எ.று)

மற்ற வர்செய லின்ன தன்மைய தாக மாலய னானவக்
கொற்ற வேனமு மன்ன முந்தெரி யாத கொள்கைய ராயினார்
பெற்ற மூர்வது மின்றி நீடிய பேதை யாளுட னின்றியோர்
நற்ற வத்தவர் வேட மேகொடு ஞால முய்ந்திட நண்ணினார். 8

மற்று, அந்நாயனாரது செய்கைகள் இவ்வாறிருக்க, திருமாலும், பிரும்ம தேவனுமாகிய வெற்றிவாய்ந்த வராஹமும், அன்னப்பறவையு மறிய வியலாத தமது கொள்கைகளையுடைய சிவபிரானார், இடப வாஹனமின்றியும் பங்கிலுறையும் மங்கையுமின்றியும், ஓர் முனிவன் வேடங்கொண்டு, இவ்வுலகத்தார் உய்யவேண்டி ஆங்கு எழுந்தருளினார். (எ.று)

மாரிக் காலத் திரவினில் வைகியோர்
தாரிப் பின்றிப் பசித்தலைக் கொள்வது
பாரித் தில்ல மடைந்தபின் பண்புற
வோரித் தாரான் விருந்தெதிர் கொண்டனன். 9

(அவ்வாறு எழுந்தருளிய) மழைக்காலத்தைச் சார்ந்த இரவினில் உறங்காது விழித்திருந்து, ஒரு வகை யாதரவுமின்றி மிகுதியான பசி மேலிட, வீட்டுக் கதவினைத் தாளிட்டு அடைத்த பின்னர், தமது பண்பின் காரணமாக அங்கு தோன்றிய விருந்ினரை தேன்மிக்க குவளை மலர்மாலையணிந்த மாறனார் எதிர் கொண்டழைத்துச் சென்றார். (எ.று)

ஈர மேனியை நீக்கி யிடங் கொடுத்
தார வின்னமு தூட்டுதற் காசையாற்
றார மாதரை நோக்கித் "தபோதனர்
தீரவே பசித்தார் செய்வதென்" னென்று. 10

வந்த விருந்தினரின் திருமேனி யீரத்தைத் துடைத்து, அவர் எழுந்தருள ஓர் இடம் கொடுத்து, பின்னர், அவர் மனமார அமுது படைக்க விரும்பி, தம் தாரமாகிய பெண்மணியிடஞ்சென்று "இத்தவத்தோரின் பெரும் பசி தீர நாம் செய்வது யாது"? என்று வினவினார். (எ.று)

"நமக்கு முன்பிங் குணவிலை யாயினும்
இமக்கு லக்கொடி பாகர்க் கினியவர்
தமக்கு நாமின் னடிசி றகவுற
வமைக்கு மாறெங் ஙனே? யணங்கேயென?" 11

"அணங்கே! முன்னதாக நமக்கே இங்கு உணவில்லை யாயினும் இமவானின் குமாரியான பார்வதியின் மணாளனுக்கடியவரான இவர்க்குத் தக்கவாறு நாம் இனிய உணவை அமுது செய்வித்தல் எவ்விதத்தில் கைகூடும்?" என்றும் வினவினார். (எ.று)

மாது கூறுவள் "மற்றொன் றுங் காண்கிலேன்;
ஏதிலாரு மினித்தரு வாரில்லை;
போதும் வைகிற்றுப்; போமிடம் வேறிலை;
தீது செய்வினை யேற்கென் செய"லென்று. 12

அதுகேட்ட அம்மங்கையர் திலகம், மறுமொழி கூறினாள் "அமுது படைக்கும் வழி யொன்றும் அறியேன்; பிறர் ஒருவரும் இனித்தரக்கூடியவருமில்லை; காலமும் கடந்து நள்ளிரவாயிற்று; உணவு பெறக்கூடிய இடமும் வேறில்லை; தீவினைமிக்க அடியாளுக்குரிய செயல் யாதுள்ளது?" என்று கூறினாள். (எ.று)

செல்ல னீங்கப் பகல்வித் தியசெந்நெல்
மல்ல னீர்முளை வாரிக் கொடுவந்தால்
வல்ல வாறமு தாக்கலு மாகு; மற்
றல்ல தொன்றறி யேனென் றயர்வுற. 13

"வறுமை நீங்குமாறு இன்று பகலில் வயலில் விதைத்த செழிப்பான நீர்முளை நெல்லைத் தேவரீர் வாரிவந்து கொடுப்பீர்களாயின், அடியாள் இயன்ற வகையில் அமுது சமைத்தல் கூடும். இதனை யன்றி வேறுவழி யொன்று மறியேன்" என்றும் கூறினாள். (எ.று)

மற்ற மாற்ற மனைவிமார் கூறமுன்.
பெற்ற செல்வ மெனப்பெரி துண்மகிழ்ந்
துற்ற காதலி னாலொருப் பட்டனர்
சுற்று நீர்வயல் செல்லத் தொடங்குவார். 14



மற்று, அச்சொற்களை மனைவியார் கூறக்கேட்டு, நாயனார் முன்னோர் தேடிவைத்த செல்வத்தைப் பெற்றாற்போல மனமகிழ்வுற்று, மிக்க ஆசையுடன் நீர் சூழ்ந்த தம் வயலுக்குச் சென்று (ஆங்கிருந்து முளை நெல்லை வாரிக்கொண்டு) வர உடன்பட்டுப் புறப்பட்டார். (எ.று)

பெருகு வானம் பிறங்க மழைபொழிந்
தருகு நாப்பண் அறிவருங் கங்குலன்
கருகு மையிருளின் கணம் கட்டுவிட்
டுருகு கின்றது போன்ற துலகெலாம். 15

வானவெளியிலே யிருந்து பெருமழை பொழிதலால், பக்கங்களும், இடைவெளியும் அறிய இயலாதபடி இருண்ட நள்ளிரவு கருகிய மை போன்ற இருட்கூட்டம் திடத்தன்மை நீங்கி உருகியதுபோல் உலகெங்கும் தோன்றிற்று. (எ.று)

எண்ணு மிவ்வுலகத்தவர் யாவருந்
துண்ணெ னும்படித் தோன்றமுன் றோன்றிடில்
வண்ண நீடிய மைக்குழம் பாமென்று
நண்ணல் செய்யா நடுவிருள் யாமத்து. 16

உலகத்தவர் யாரும் எண்ணிப் பார்க்கையில் துண்ணென நடுக்கமுறும் வகையில் இருள் தோன்றவே, நீடிய வண்ணமுடையமைக் குழம்பென்றும் அது மேலே பட்டுவிடும் என்று அஞ்சியும் வெளிவரா தடைந்திருந்த நள்ளிருள் யாமவேளை யாயிருந்தது. (எ.று)

உள்ள மன்புகொண் டூக்கவோர் பேரிடாக்
கொள்ள முன்கவித் துக்குறி யின் வழிப்
புள்ளு றங்கும் வயல்புகப் போயினார்
வள்ள லாரிளை யான்குடி மாறனார். 17

பெரும் வள்ளலாராகிய இளையான்குடி மாறனார் உள்ளத்தில் அன்பு ஊக்கமளிக்கவே, முளை நெல்லை வாரிக்கொண்டுவர ஒரு பெரிய கூடையைத் தலைமேல் கவிழ்த்துக்கொண்டு முன் பகலில் அறிந்திருந்த வழியின் அடையாளங்களைக்கொண்டு பலவகை (நீர்ப்) பறவைகளும் உறங்கும் தன் வயலில் புகவிரும்பிச் செல்லலானார். (எ.று)

காலி னாற் றடவிச் சென்று கைகளாற்
சாலி வெண்முளை நீர்வழிச் சார்ந்தன
கோலி வாரி யிடாநிறை யக்கொண்டு
மே எடுத்துச் சுமந்தொல்லை மீண்டனர். 18

கால்களால் வழியைத் தடவிச்சென்று, வயலில் மழை நீரின் வழியே மிதந்த நெல்லின் வெண் முளைகளைக் கைகளால் சேர்த்து வாரி எடுத்து இறை கூடையின் நிறையைக் கொண்டு, அக்கூடையை மேலே தூக்கிச் சுமந்து, விரைவில் தன் வீட்டிற்கு வந்தனர். (எ.று)

வந்தபின் மனைவி யாரும் வாய்தலி லின்று வாங்கி
சிந்தையில் விரும்பி நீரிற் சேற்றினை யலம்பி யூற்றி
"வெந்தழ லடுப்பின் மூட்ட விறகில்லை" யென்ன, மேலோர்
அந்தமில் மனையி லீடு மலக்கினை யறுத்து வீழ்த்தார். 19

நாயனார் வீட்டிற்கு வந்ததும், மனைவியார் வாயிலில் நின்று அவர் கொணர்ந்த கூடையை வாங்கி, மனத்தில் அன்பு நிறையப் பெற்று நெல்முளையிலுள்ள சேற்றைக் கழுவியபின், மாறனாரிடம் "அடுப்பு மூட்டுவதற்கு விறகில்லையே" என்று கேட்கவே, மேன்மை வாய்ந்த நாயனார் — அழியாப் புகழ்வாய்ந்த (அழகற்ற) தன்வீட்டுக் கூரையிலுள்ள அலக்குகளை விறகிற்காக அறுத்துத்தள்ளினார். (எ.று.)

முறித்தவை யடுப்பின் மாட்டி முளைவித்துப் பதமுன் கொள்ள
வறுத்தபின் னரிசியாக்கி வாக்கிய வுலையிற் பெய்து
வெறுப்பிலின் னடிசி லாக்கி மேம்படு கற்பின் மிக்கார்
"கறிக்கினி யென்செய் கோ"மென் றிறைஞ்சினார் கணவனாரை. 20

அங்ஙனம் வெட்டி வீழ்த்திய கூரை யலகுகளை முறித்து அடுப்பு மூட்டி, அதில் நெல்லின் ஊறிய முளைகளைப் பதமாக வறுத்து, அரிசியாகக் குற்றியெடுத்துச் சுத்தம்செய்து பொங்கவைத்த உலையிலே யிட்டு, வெறுப்பு ஏற்படா வகையில் இனிய அமுது தயாரித்து தம் கணவனாரைப் பார்த்து, "இனி கறி யமுது சமைக்க என்ன செய்வோம்"? என்று வேண்டி நின்றாள். (எ.று.)

"வழிவரு மிளைப்பி னோடும் வருந்திய பசியினாலே
யழிவுறு மையன்" என்னு மன்பினிற் பொலிந்து சென்று
குழிநிரம் பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப் பாசப்
பழிமுதல் பறிப்போர் போலப் பறித்தவை கறிக்கு நல்க. 21

"எம் ஐயன் வழிநடந்த களைப்பினாலும், பசியாலும் மிக வருந்துவார் என்றபடி அன்புமிகுந்து, கொல்லைப்புறஞ் சென்று, முளைக்கவைத்த குழிகளும் நிரம்பப்பெறாத சிறு (கீரை) இலைக்கறிப் பயிர்களைக் கையினால் தடவிப் பாசப்பழிகட்குக் காரணமான ஆணவம், கன்மம், மாயை யெனும் மும்மலங்களையும் பறிப்பவர்போலப் பறித்து மனையாளிடம் கொடுத்தார். (எ.று.)



மனைவியார் கொழுநர் தந்த மனமகிழ் கறிக ளாய்ந்து
புலனிடைக் கழுவித் தக்க புனிதபாத் திரத்துக் கைம்மை
வினையினால் வேறுவேறு கறியமு தாக்கிப் பண்டை
நினைவினாற் குறையை நேர்ந்து திருவமு தமைத்து நின்று. 22

மனைவியார், கணவன் தந்த இலைக்கறிகளை மகிழ்வுடன் ஆய்ந்து நீரிலே கழுவி, தூய பாத்திரத்திலிட்டு, தம் கைப்பழக்கத்தால், வெவ்வேறாகப் பலவகை கறிகளாய்ச் சமைத்து, பழைய நினைவால் ஏற்படும் குறைபாட்டை எண்ணி ஒருவாறு மனம் தேர்ந்து திருவமுதுகளை முற்றத் தயாரித்து வந்து நின்றாள். (எ.று)

கணவனார் தம்மை நோக்கிக் கறியமு தான காட்டி
"யிணையிலா தவரை யீண்ட வமுதுசெய் விப்போ" மென்ன
உணர்வினா லுணர வொண்ணா வொருவரை யுணர்த்த வேண்டி
யணையமுன் சென்று நின்றங் கவர்துயி லகற்ற லுற்றார். 23

பின், கணவனாரிடம், கறிகளும், அமுதுகளும் சமைத்த வகைகளைக் காட்டிப் பின், "ஒப்பற்ற அடியாரை விரைந்து இப்போதே அமுது கொள்விப்போம்" என்று சொல்ல, உணர்வினாலறியவியலாத அவ்விருந்தினரை யழைக்கவெண்ணி, அருகே சென்று நின்று நாயனார் அவரது துயிலை அகற்றத் தொடங்கினார். (எ.று.)

"அழுந்திய விடரு னீங்கி யடியனே னுய்ய வென்பால்
எழுந்தருள் பெரியோய்! ஈண்ட வமுதுசெய் தருள்க" வென்று
தொழும்பனா ருரைத்த போதிற் சோதியா யெழுந்து தோன்றச்
செழுந்திரு மனைவி யாருந் தொண்டருந் திகைத்து நின்றார். 24

"அடியேன் அழுந்திய இடரினைவிட்டு நீங்கி உய்வதற்கென்றே என்னிடம் கருணையுடன் எழுந்தருளிய பெரியோரே! விரைவிலே இங்கு அமுதுசெய்ய எழுந்தருளுவீராக" என்றிவ்வாறு அடியார்கட்குத் தொண்டுபுரியும் நாயனார் வேண்ட, அவ்விருந்தினர் சோதிப் பிழம்பாய் எழுந்து காட்சி நல்கவே, அழகிய மனைவியாரும், மாறனாரும் மயங்கி நின்றனர். (.எ.று.)

மாலயற் கரிய நாதன் வடிவொரு சோதி யாகச்
சாலவே மயங்கு வார்க்குச் சங்கரன் றான்ம கிழ்ந்தே
யேலவார் குழலா டன்னோ டிடபவா கனனாய்த் தோன்றிச்
சீலமார் பூசை செய்த திருத்தொண்டர் தம்மை நோக்கி. 25

திருமாலுக்கும், பிரும்மதேவனுக்கும் அரிய சிவபிரான், தானேற்றுவந்த அடியாரின் வடிவம் மாறி ஒரே சோதிப் பிழம்பு வடிவமாகிக் காட்சி தரவே, திகைத்து நின்ற அத்தம்பதிகட்கு, மகிழ்வுற்ற சிவனார், நறுமணமுள்ள நீண்ட கூந்தலையுடைய பார்வதி தேவியுடன் இடப வாகனத்தின்மீது எழுந்தருளி, சிலம்பிக்க, அடியார் பூசை புரியும் மாறனாரை நோக்கி யருளினார். (எ.று.)

"அன்பனே! யன்பர் பூசை யளித்தநீ யணங்கி னோடும்
என்பெரு முலக மெய்தி, யிருநிதிக் கிழவன் றானே
முன்பெரு நிதிய மேந்தி மொழிவழி யேவல் கேட்ப,
வின்ப மார்ந்திருக்க" வென்றே யருள்செய்தா னெவர்க்கு
மிக்கான். 26

"அன்புடையவனே! அடியார்களின் பூசையைச் சிறப்பாயளித்த நீ உன் மனைவியுடன் எமது பேருலகையடைந்து, குபேரன் தானே முன்னதாகப் பெருநிதிகளை ஏந்தி உன் சொற்படியே குற்றேவல் கேட்டு நிற்க, ஈடற்ற பேரின்பம்பெற்று நீடூழி வாழ்க" என்று எவரினும் மேம்பட்ட பரமசிவனார் திருவாய் மலர்ந்தருளினார். (எ.று.)

இப்பரி சிலர்க்குத் தக்க வகையினா லின்ப நல்கி
முப்புரஞ் செற்றா ரன்பர் முன்பெழுந் தருளிப் போனார்
அப்பெரி யவர்தந் தூயவடி யிணை தலைமேற் கொண்டு
மெய்ப்பொருட் சேதி வேந்தன் செயலினை விளம்ப லுற்றேன். 27

இவ்வகையாக, இவ்வடியார்க்குத்தக்க இன்பங்களைக்கொடுத்து, முப்புறமெரித்த முக்கண்ணனார், அன்பரின் எதிரேயிருந்து மறைந்து அந்தர்த்தானமடைந்தார். இப்படி மேன்மைபெற்ற பெரியாரான—இளையான்குடி மாறநாயனாரின் தூய திருவடியிணைகளை எமது தலைமேல் தாங்கி, அவற்றையே துணையாகக்கொண்டு "மெய்ப்பொருள்" என்ற திருப்பெயர்கொண்ட சேதிநாட்டரசனின் செய்தியைச் சொல்லப் புகுந்தேன். (எ.று.)

இளையான்குடி மாறநாயனார் புராணம் முற்றிற்று.



வாழவந்தானம்மன் என்னும் அபீஷ்ட வரப்ரசாதினியான

ஸ்ரீ வாள்மேல் நடந்த அம்மன்.

மதன வேணுகோபாலப் பெருமாள்



நின்று குழலூதும் விண்ணகரத் தெம்பெருமான்
கன்று குணிலெறிந்தான் குன்றுகுடைக் கோபாலன்
தன்கரத்தாலபய மருள் நாரணனும் நெடுங்கரியோன்
துன்னொளிசேர் மாணிக்க மரகதநேர் மதனனிறே,

உ
சிவமயம்.

இளையான்குடி வேதாந்த மடத் தலைவர்

# ஸ்ரீலஸ்ரீ சிவானந்த சுவாமிகளாலியற்றப்பெற்ற

# இளையான்குடி மாறநாயனர் புராணம்.

### ஸ்ரீ சொரூப வணக்கம்.

சத்திய சித்கன சாஸ்வத சாந்த
அத்வைத மோன வகண்டா கார
நித்திய வக்ஷர நின்மல ரூபம்
புத்தியி னித்தியம் போற்றுதல் செய்வாம். 1

### ஸ்ரீ சர்வமூர்த்தி வணக்கம்.

கரிமுக னறுமுகன் கௌரிமா லயனரன்
பரிதிவிண் ணவர்பதி பங்கய விறைவியர்
திரிபறு விண்ணவர் சித்தவிஞ் சையர்பதம்
புரியுமிந் நூல்பெறப் போற்றுகின் றேனே. 2

### ஸ்ரீ பஞ்சமூர்த்தி வணக்கம்.

அருமறை யடியொரு வாகம தாகிய
கரிமுக வரதனைக் கந்தனை யுமையை
அரியய னமரரொ டனைவர்த மிறையைத்
திரிபறு குரவனைச் சிந்தனை செய்வாம். 3

### ஸ்ரீ அருளிறை வணக்கம்.

என்னை யாண்டவ னிளசையில் வாழ்ந்திடு மிறைவி
முன்னைத் தாண்டவ மாடிய முதல்வர்க்கு முதல்வி
அன்னை யத்தனு யல்பகல் காக்குமென் னம்மை
தன்னைத் தானருள் சற்குரு ஞானநா யகியே. 4

### அவை யடக்கம்.

மெய்யுணர் சேக்கிழார் விரித்த விக்கதை
மெய்யுணர் சிறுவனுன் விரிக்கும் விந்தைதான்
மெய்யுணர் தபனனுல் விளக்கு மேதினி
மெய்யுணர் மின்மினி விளக்கல் மானுமே. 5

### வேறு

இளசையில் வாழ்ந்து மாற னிறையன்பர் பக்தி பூண்டு
வளமலி கங்கை வேணி மகதேவர் பதமடைந்த
அளவிலாக் காதை தன்னை யன்பர்கள் விரும்பிக் கேட்க
வுளமகிழ்ந் துரைத்தே னித்தை யுத்தம ருவந்து கொள்வார். 6

இப்பெருங் காதையை முன்னோ ரெழுதிய சுவடி பார்த்துஞ்
செப்பரும் பெரியோர் கர்ண பரம்பரை - செவியிற் கேட்டுந்
தப்பறுங் கல்வெட் டுக்கள் சார்ந்துள விடம றிந்துஞ்
செப்பின னிதனை யித்தைத் தெரிந்தவ ருவந்தி டாரோ? 7

கனிமொழி யுமையாள் பாகற் கண்டுளங்குளிருந் தொண்டர்
இனியன பகர்ந்து செய்யு மிளசைவாழ் மாற வெந்தாய்
இனிமையாம் பொருளுஞ் சொல்லு மியைந்திடாச் சிறுவ னேனுந்
தனிமையாம் நினது கீர்த்தி சாற்றினே னேற்றுக் கொள்ளே. 8

காப்பு

அத்திமா முகனே போற்றி அறுமுகவேலா போற்றி
சத்தியா முமையே போற்றி சங்கரா போற்றி யெங்கள்
சத்திய குருவே போற்றி சங்கம பத்தி செய்து
சத்திய முத்தி மாறன் சார்கதை யுரைப்ப தற்கே. 9

நாட்டுச் சிறப்பு.

பூமகன் படைப்பின் மேலாம் பூவுலகதனின் மேலாங்
கோமகன் பரதனுண்ட குவலய மத்தின் மேலாந்
தேமகன் காவினஞ் சூழ் திருப்பாண்டி நாடேயத்தை
மாமக னன்றி நம்மால் வகுக்கலாந் தகைமைத் தாமோ 10

தடாதகை யாகி யம்மை தனியர சளித்த நாடு
சடாதரன் மாறனாகித் தனிக்குடை நிழற்று நாடு
படாத வேற்குமரன் பாண்டி யரசனாய்ப் பரித்த நாடு
கெடாதிதன் பெருமைதன்னைக் கிளத்துன ருலகில்யாரே. 11

நகரச் சிறப்பு.

இப்பெரு நாட்டில் வைகை யியல்வட கரையின் மேய
செப்பரு மிளசை நல்லூர் செழுமிலை யான்கு டியென்
றொப்பறும் நாமம் பூண்ட வுயர்பதி யுள்ள தலைதில்
முப்புர தகனன் மாயன் மூர்த்தி நீர் தலமு முண்டால். 12

இப்பதி தன்னி லோர்கா லிந்திர னவதரித்துத்
தப்பித மனைத்து நீங்கித் தவம்பல பகலிழைத்துச்
செப்பிய தன்பே ராலே தீர்த்தமு மூர்த்தி கண்டு
தப்பிலாப் பூஜை செய்து கதிதனை நண்ணி னானல். 13

கோதமன் மரீசி முன்னாங் குலமுனி வசிட்ட ரோடு
மேதமில் கவுசிகப்பே ரியன்முனி புலத்தி யன்றான்
கோதறு சவுனகாதி குறைவறு முனிவர் மன்னர்
மாதவ மியற்ற முன்னாள் வதிந்ததிப் பதியென் பாரே. 14



வில்வத்தின் வனமா மித்தை விரிவுறக் கூறக் கேண்மின்
எல்கையோர் காததூர மெழிலுறு வகல நீளம்
அல்கள னுறையுங் கோயிலைம்பதி னொன்று மாயன்
தொல்பதி பதினெட்டாகுந் தொண்டர் தம் மடமீராறே. 15

அத்தியின் வத்திரர்க்கு வாலயம் நூற்றியெட்டாஞ்
சத்திவே லவர்க் கிரெட்டாஞ் சத்தியா லயம்பதினொன்றும்
சந்திர மூவா றுகுந்தர்ம சாலையுமீ ரேழாம்
மெத்திய பாடசாலை வியப்புற வீரைந் தாமே. 16

கோமடம் பதினொன் றுகுங் கோலமா மடமு மேழாந்
தேமலர்க் காவினங்கள் சிறப்புற விருபத் தொன்றும்
பூமரு சிறுவர் கற்கும் புகழ்ப்பள்ளி யிருபத் தைந்தாம்
காமரு ராஜவீரர் கற்குஞ் சாலையுமோ ரைந்தே. 17

மறையவர் தெருவும் ராஜ மன்னவர் வீதி தானும்
நிறையுறும் வணிகர் வேளாண் நீள்மறு களவி லாதாம்
இறையவர்க் கெல்லிற் கங்கு லியலறு காலந் தன்னில்
மறைகளா கமத்திற் சொன்ன வழிமுறை பூஜையாமால். 18

நாயனாரின் சிறப்பு.

மதுரையம் பதியின்மேய மாறனும் பாண்டி யற்கு
விதிமுறைக் கணக்க ராயும் விபுதராம் புலவராயும்
மதிபெறு மமைச்சராயும் மாண் பொருட் டலைவராயும்
வதிதலா லித்த லத்தில் மாறன் கோத் திரமொன் றுண்டு. 19

கள்ளாமை கள்ளுண் ணாமை காமத்தைத் கடந்து நிற்கை
யெள்ளாமை கொலை செய் யாமை யிகழ்புலை யுண்ண லின்மை
தள்ளாமை யுலகைப் போற்றுந் தாளாண்மை வாய்மை செம்மை
வெள்ளாண்மை முதலாக் கொண்ட வெள்ளாளர் குலத்து ளாமே. 20

இத்தகை மாண்பு மாற னியலுடைக் குலத்து வந்தோன்
சத்தியந் தருமத் தானம், தயை பொறை யடக்கந் தூய்மை
வித்தை நல் விநயங் கேள்வி விண்ணவர் பூசை நோன்பு
பத்தர்க ளுறவு மேலாம் பண்பெலா முருவ மானோன். 21

ஏகமா யசலமாகி யெங்கணு நிறைந்த தாகி
நாகமு மண்ணுங்கீழு நாடொனாப் பொருள தாகிச்
சோகமா மனத்திற் கெட்டாச் சுயஞ் ஜோதியான வொன்றை
யோகமாய் மனதிற் காணு முத்தம தவத்த னானோன். 22

இந்திர போக மென்ன வியனலம் பலவா யுள்ளோன்
சந்திர மாறன் தந்த தவமகன், தூயராஜ
யிந்திர மாற னென்போ னிளமையிற் கலைகள் கற்று
சுந்தர வதனி ஞானம் பிகையினைத் துணையாய்க் கொண்டான். 23

அருமறைக் கிழவன் மேலா மடியவர் சிவவேடத்தார்
திருமுறை பாடுவோர்கள் சித்தத்தைச் சிவன்பால் வைத்தோர்
தெருண்மிகு சிவஞானத்தார் தேசிகத் தன்மை பூண்டோர்
ஒருவரு மொழியா தெங்க ளுணவையே யுண்ண வாரீர். 24

என்றுமே மறைகள் சாற்றி யிருபோது முணவ ளிப்பார்
துன்றிய பிரமசாரர் துறவிகள் வன வாசத்தார்
தென் றிசை யுள்ளா ரொக்கல் தெய்வந்தான் விருந்தினர்க்கு
வொன்றவே யுபசரிப்பா ருறுதுணை யறவோர்க் காவார். 25

இன் னவாறிளசை மாற னில்லாளுந் தானு நேர்ந்து
நன்னய வீசன் றொண்டர் நாடிய வனைத்துஞ் செய்தார்
மன்னவர் வணங்குங் கீர்த்தி மாறனை தியற்கை யன்பை
கன்னல்வே ளெரித்த தேவன் கருதினா னாராத்திற்றனே. 26

அளகைக் கோனிக ரதான வருஞ்செல்வ வமையத் தூற்ற
வளமையி னன்றி மற்றை வறுமைநாள் வந்த போதும்
உளமிவ னடியார் மாட்டு வுதவலும் வல்லனோ வென்
றுளமதில் வறுமைசேர வுன்னினா னருள முவந்தே. 27

பல்வளச் செல்வமெல்லாம் பகல் மதியனைய தாக
வல்கல னடியார் பக்தி யறன் வழித்தொண்டு பூஜை
பல்பகல் வறுமை யுற்றும் பரமன தடியார் காணின்
பல்கடன் பட்டும் போற்றும் பக்தியில் மாறான் மாறன் 28

என்றுமே சிவவேடத்தார்க் கென் னுடைச் செல்வ மென்றே
யொன்றிய வனைத்துந் தொண்டர்க் குண்மையாய்த் தானஞ் செய்தார்
துன்றிய வறுமை யுற்றுந் துறவரை யறச்சோ றேற்றும்
என்றுமே போற்ற வல்லா ரிவர்பக்தி யியம்ப லாமோ. 29

தனக்குள விலமோ சிற்றில் தரித்திர மதிக மாகும்
தனக்குறு பசியை மாற்றக் கருத்தொரு வகையு மில்லை
மனைக்குநற் கூறை யில்லை மறுதுணி யுடுக்க வில்லை
மனக்கணி லடியார் பக்தி மட்டுமே குறைவின் றாமால். 30

பக்தியை யடியார் போற்றும் பரதேவ னாராய்ந் தேர்ந்து
வித்தின மிளசை சென்று வியன்மாற னடையுமாறு
சத்திய மூர்த்தி யீங்கு சாருவ னென்று போந்தான்
மெய்த்தவ வேடத் தோடு மேவிய வவன்ற னில்லில். 31

அடைமழை யடைத்துப் பெய்ய வர்த்தராத் திரியில் வந்து
கருகிய பசியால் மெத்தக் களைத்தனன் களைகண் காணேன்
உடலிதை மாற்றி லீரே லுயிர்போகும் பசியு மக்கே
கூடனென வுரைத்தா னந்தக் கருணை வாரிதியோ யன்னான். 32



ஆரவே ளரியர்த மன்ப வடிசில்நா மமைத்துத் தாரோ
மீரமே னியில கற்றி யிவ்விடத் திருத்தி யென்று
தாரமா திடத்து நண்ணித் தாபதர் நிலைமை கூறிக்
காரமர் குழலாய் செய்யுங் காரணங் கூறு மென்றார். 33

நாமினிச் செய்வதென்னே நமர் பிறர் துணையு மில்லை
சாமமு மிரண்டா தாச்சு சங்கட மெதுவு மில்லை
நாமுனம் விதைத்த நெல்லை நல்கினாலடிசில் செய்வே
னேமுற விதனையன்றி யென் செய்வே னேழை யென்றாள். 34

நன்மொழி புகன்றா யென்று நாயனார் வயலிற் சென்று
நென்முளை வாரி வந்தார் நேரிழை யெதிர்சென் றேற்று
சென்னெலிற் சேறு நீக்கித் தீமூட்ட விறகில் லென்னத்
தன்மனை யலக்கை யீர்த்துத் தந்தன ரதனைக் கொண்டும். 35

வறுத்து நல்லரிசி யாக்கி வாய்த்தநல் லுலையிற் பெய்து
சுறுக்கெனச் சமையல் செய்தும், தொடுகறிக் கடியார் தந்த
வெறுப்பிலாப் பயிர்க டன்னை விதவிதங் கறிகள் செய்தும்
மறுத்திடாக் கற்பி னல்லாள் மகிழ்நருக் கறிவிப்பாளே. 36

தலைவர்முன் தலைவி யெய்திச் சமைத்தநல் வகைகள் காட்டி
நிலைபெறு தவரை யுண்ண நேர்மையா யழைமி னென்றாள்
நலமெனச் சென்று தூங்கு நற்றவர் துயிலை நீக்கச்
சொல வொணாச் சோதி ரூபமாகவே தோன்றினாரே. 37

நீதிலாச் சோதி கண்டு திகைத் திருவருமே நிற்கப்
பாதியோர் பெண்மையாகப் பகர் விடை யதனிற் றோன்றிக்
கோதிலாப் பக்தி பூண்டு குலவினர் தம்மை நோக்கி
யேதிலு மடியார் பக்தி யிடையறா தொழுகி நின்றீர், 38

அன்பரா யுள்ளீர் கேளீர் அருமறை முடிவ தான
வென் பெரு முலக மெய்தி யிருநிதிக் கிழவன் றானே
தன்பெரு நிதியமேந்தித் தனிப்பெரு மேவல் செய்ய
வின்பமார்ந் திருப்பி ரென்றே யிசைத் தொளியாகிச் சென்றான். 39

பரம் பர னுலக மெய்திப் பல்பெரும் போகந் துய்த்துத்
திரம்பெறு ஞானம் பெற்றுச் சீவன் முத்தனுமே யாகிச்
சரம்பெற வவா னில்லாச் சாஸ்வத முத்தி யுற்றான்
நரச்சுர வுலக முற்றோர் நாடிடும் பதமீ தாமே. 40

இப்பெருங் கதையைக் கையா லெழுதினோர் படித்து ளோரும்
மெய்ப்பாடச் செவியிற் கேட்க மேவிய தொண்டர் யாரும்
செப்பிய விளசை மாறன் செயலினி லினிது சேர்ந்து
வைப்பணி சடிலத் தெம்மா னடியிணை சேரு வாரே. 41

வாழிநல் விளைசை மாறன் மனமகிழ் நீச னன்பர்
வாழிநல் விளைசை மாறன் வழிவழி மரபுவந்தோர்
வாழிநல் விளைசை மாறன் மலரடிக் கன்பு செய்வோர்
வாழிநல் விளைசை மேவும் மன்பதை யனைத்துந் தானே. 42

திருச்சிற்றம்பலம்.

---

## இளைசைமாநகர்—திருத்தாண்டகம்.

சீரானைத் திரிபுரங்க ளெரித்தான் றன்னைத் திருநெறி
களருமறைக் கண் செய்வித்தானைப்
பேரானை யுரிபோர்த்த பெம்மான் றன்னைப் பேயாடுஞ்
சுடுகாடே வீடானானை
நேரானை நேர்மை யுளா ருள்ளத்தானை நின்மலனை யென்மன
நேரிளைசை யென்னும்
ஊரானை யொடு நிமிட முள்ளுவார்கள் உணர்வாலே பிறவாழி
நீந்துவாரே. 1

சீராருஞ் சதுர்மறையுந் திகழ வோதித் தெளிவுறவே
கலைகளெல்லாங் கற்றோரேனும்,
பேராரும் யோகமுடன், போகமெல்லாம் பிணக்கறவே
கைவந்த பெரியோரேனும்
தாராரும் சடைமுடியா னிளைசை மேவுஞ் சங்கரனைத் தனி
மனத்தாலுன்னாராயின்
நாராரும் முருக்கமலர் மணமேபோல, நலமிழந்து பலமிழந்து
நலிகுவாரே. 2

கண்டார் களுள்ளத்துக் கரியானானைக் காணாதாருள்ளத்துக்
கரிதானானை
விண்டார் களுள்ளத்து வெளிதானானை விள்ளாதா ருள்ளத்து
வெளிதானானை
கண்டாகிக் கனியாகிக் கனிரசம்போற் கருதுவார் கருத்தினுட்
கலந்துநின்ற
வொண்டேனை யிளைசை நகர்ச்சோதியான வுத்தமனை
யென்னுளத்தி லுன்னினேனே. 3

எருக்கினொடு கொன்றை யருகணிந்தோன் றன்னை யேமனொடு
காமனையும் வென்றான் றன்னை
மருக்குலவு மலரின் மணமானான் றன்னை மாமணியினொளியாகி
நின்றான் றன்னை
கருக்குழியிலடியவரை வீழாவண்ணங் கதி மீதிலுய்க்க வல்ல
கடவுள் தன்னை
தெருக்குலவு மிளைசை வளர் தேவன் றன்னைச் சிந்தனையில்
வந்தனை செய்துயருவேனே. 4



மனமணியை, மனமணியிலழுக்கை மாற்று மாமணியை
மாமணியிலொளி போனின்ற
தினமணியைத் தினமணியு மதியுங் கண்ணுஞ் சிரமணியைத்
தேவர்க்குந்தேவாய் நின்ற
கனமணியைக் கண்ணுளத்தார் காணவேண்டின் கருமுகில்
சூழ் பொழிலிளைசை கலந்தாங்கு
அனமணிசெய் தீர்த்த மதில்மூழ்கி நாளும் அருகிலுள
வாலயத்தைச் சேருவாரே. 5

வானுடர் தொழுதேத் தவல்லான் றன்னை வானவர்க்கும்
மானவற்கும் அறியான் றன்னை
ஆனாத அன்புளத்தி லில்லேன் றன்னை அநாதரவு செய்யாத
அமலன் றன்னை
தேனாகப் பாலாகத் திகழ்வான் றன்னை தென்னிளைசை யெந்நாளும்
வாழ்வான் றன்னை
தானாகத் தொழுதுறைய வல்லோ ரெல்லாம் சகஜ சமாதியை
யுற்றுத் திகழ்வார் தாமே. 6

நல்லோர்கள் மனம் நித்த முறைவான் றன்னை நாயெனையும்
அடியவனாய் வைத்தான் றன்னை
பொல்லார்கள் நடுவுளத்திற் பொருந்தான் றன்னைப்
புண்ணியராம் நால்வருக்கும் போதமூட்டக்
கல்லால நீழலினி திருந்தான் றன்னைக் கனக நெடுமாட
மலியிளைசை தன்னில்
செல்லாரு மதில் நிறைசூழ் ஆலயத்திற் சிவனவனை யனுதினமும்
சிந்திப்பேனே. 7

மாலாகி நான்முகனாய் நின்றான் றன்னை மறைநாலா யாகமு
மாயமர்ந்தான் றன்னை
காலாகி யனல்மதியாய் ரவியானானைக் கண்மணியாய்ப்
புண்ணியமாய்க் கலந்தான் றன்னை
நாலாய பதமோக்ஷமானான் றன்னை நாயகனைத் தென்னிளைசைக்
கோயிலானை
பாலான மனமதனாற்காண வல்லார் பரமபத வாழ்விலுறும்
பண்பினோரே. 8

பந்தங்க ளனைத்தினையு மறுத்தான் றன்னை-பாரெரிவிண் கால்
புனலாய் நின்றான் றன்னை
அந்தநடுவாதி யிலாவ மலன் றன்னை யாரணத்தோடாக
மங்களாக்கினானைக்
கந்தமைந்தின் வழிச் சென்ற கடையனேனைக் கடிபொழில்
சூழிளைசைதனிற் காக்கவந்த
அந்தணனை நாவாரப் பாடவல்லோர் ஆக்கையிலா மோக்க
மதையடைகுவாரே. 9

ஆதியாயனாதியாய் நின்றான் றன்னை அண்டரண்டகோடி
யெலாமாக்கினானை
நீதியாய் நெறிமுறைகள் வகுத்தான் றன்னை நீசர்க்குந் தாசர்க்கு
நேரானானைச்

சோதியாய்ச் சுடர் விளக்காய்த் தோன்றினானைச் சோலை
வளரிளசை நகர்ச் சோதியானைப்
பாதியாமன நிலையாற் பாடுவார்கற் பாதியஸ்தியின்பம திற்
படிகுவாரே. 10

## திரு வாள்மேல் நடந்த அம்மனின் விருத்தம்.

திருமேவு மிளசை நகர் வளர்கின்ற செல்வியே தேவி மகமாயி காளி
செல்வத்துரைச்சியே வள்ளப்பழுத்தமுலை தேனொழுகு கூந்தலழகி
தேசமெங்கும் புகழ வாசவன் முதலான சேனாபதித் தலைவரும்
தேவாதி தேவரும் மூவர் முனிவோர்களும் சென்றடி வணங்கி நிற்க
மருமேவு பூங்குழல் மின்னார்கள் நடனமிட மத்தளந்தித்தி கொட்ட
மகத்தான கிம்புருடர் கைலாச வீணைகள் வாசித்துக் கீதம் பாட
மங்களம் சோபனம் பல்லாண்டு கூறி யெதிர்மாதர்கள் துதித்துநிற்க
இருநிலம் புகழ்பெறுந்தேவர் சபை தன்னிலே யினிதாக வீற்றிருக்கும்
இங்கித பராபரி சங்கீத கோலாகலி யேகாட்சர பூரணி
இயலான கலைவாணி செயலான நிருவாணியே காந்தமான ரூபி
ஏந்திய சக்கர மாலுடை சகோதரி யெழிலான லோகாம்பரி
அருளே யெனக்கு நிதமகலாதிருக்கவே யருள்தந்து பாடவருள்வாய்
அந்தரி சௌந்தரி நிரந்தரி, துரந்தரி யாதியாய் நின்ற பொருளே
ஆங்காரி யோங்காரி ரீங்காசனந் தனி லமர்ந்திடுஞ் சோதிவடிவே
அம்பரஞ் சூழ்ந்து வளர் வாளவந்தம்மையே யானந்தமான வுமையே.

உ

ஸ்ரீ கணேசாய நம:

# ஸ்ரீலஸ்ரீ சிவானந்தவடிகளின்

## ஸ்ரீ ஏகாதச மூர்த்திகள் துதி.

### [அனுபந்தம்]

#### ஸ்ரீ சப்த மூர்த்திகள்.

களமற்ற நல்லூர்க் கணேசனே கந்தனே
களமற்ற வீசனே கவுரியே — வுளமுற்ற
நல்லாலா நந்தீசா காவலுங்கள் சண்டீசா
எல்லாமார் நுந்தாளை யேத்த. 1

#### ஸ்ரீ ஏகாதச மூர்த்திகள்.

இளசைவாழ் கணேசன் கந்த னிறைபவ னடேசன் கல்லால்
வளமதார் குரவன்றேவி வரம் பெறு சண்டிகேசன்
துளபமால் துற்கை மாறன் துகளறு முனிய சாமி
வளமையைப் பாட வேண்டும் வல்லவர் காக்க வேண்டும். 2

#### ஸ்ரீ பஞ்ச மூர்த்திகள்

கருவுறு துபரமருவுறு தகற்றுங் கயமுகப் பகவனை யசுரர்
வெருவுற வடிவேல் விடுத்த நற்குகனை விஞ்சையாம் ஞானவம்பிகையை
மருளினை யறுக்கு மாசில் ராஜேந்திர மாபெரும் சோதியீஸ்வரனை
தெருளுறும் ஞானதேசிகன் றன்னைத்தினம் பணிந்திட
— றொழித்திடுவாம். 3

#### ஸ்ரீ சுந்தர விநாயகர்.

ஐந்து சேர்கர ஆனைமாமுக வந்தி போன்றொளிர் மேனிய
இந்து சேகரத் தெந்தை பாலக விளசைமாநகர் மேவிய
சுந்தரத்த விநாயகா வென்றன் றொல்லை வல்வினை மாற்றிநின்
செந்திருப் பதந் தந்தெனக் கருள் செய்குவாய் தேவதேவனே. 4

எந்தையே யெழிற்கந்த வேளொடு வெழில் கொளும் புனத்துற்றோர
பந்துநேர் தனவள்ளி காதலிற் பட்டு மெத்த வருந்திட
அந்த வேளையிற் றந்தியாய் வருமத்தனே யென்னகமதில்
வந்து நாளும் விளங்கி யென்கவல் மாற்றியே யருள்தந்திடே. 5

### ஸ்ரீ சிவானந்த சண்முகம்.

வேலனே யுமை பாலனே யுயர் வேதனாதியவானுளோர்
காலனே யெனுஞ் சூரனாதியர் காலனே மகிநாவலா
பாலனான வெனக்கு முன் றிருப்பாதமேதா னீதனே
கோல மாமயில் மீதிலேறி முன் குறுகுவாயறு முகவனே. 6

உருவு மாகுவை யருவுமாகுவை யுளது மாகுவை யிலதுமாய்
மருவு மாகுவை மலருமாகுவை மணியுமாகுவை யென்னினே
முருகனே சிறுபருவனா னினை முன்னி யெவ்வண நண்ணுவேன்
குருவுமாகி யெனக் கருள் செயக் கூடுவாய் திருக் கோலமே. 7

குமரனே யறு முகவனே யிரு கொடியிடை யவர் குங்கும
ம மரு கொங்கை குலுங்கவே மரு வற்புதா குகசிற்பரா
அமரவே யெனை நாளிலாவரை யாண்ட தாணவாற்ற தன்
முமர மாற்றி யெனக்கருள் செய முன்வந்தே யருள்மூர்த்தியே. 8

வாசவன் மலர்வாணி காதலன், மாபெருங் கடற் பள்ளிகொள்
கேசவன் சிவராஜனாதிய கேடறுஞ் சிவ யோகியர்
பாசவன் பவநாசகன் றிருப்பாண்டி தன்னிளசையெனும்
தேசவன் சிவானந்த சண்முகன் சேவடி நித நாடுவாம். 9

### ஸ்ரீ ஞானாம்பிகை.

அரகர வொலியேயந்தர வெளியே, யம்பிகை யுமையே யருள்தருவாய்
குருபரமணியே குமரிசற்குணியே, குடிலையின் பொருளே குணமருளாய்
சரவணபவனைக் கயமுக மணியைத் தந்திடுமொளியே சரண் தருவாய்
நரசுர முனிவரனுதினம் பரவும் ஞானமுந்தருவாய் ஞானநாயகியே. 10

திருமரு மார்பன் செழுமலர் மேலோன் தேடியுங் காணாச்சிவபரம் பொருளின்
அருகினிலமரும் அரும்பொனேமணியே யடியனை நாளுமாளு நல்லருளே
ஒருமறை கோடியுருவமாய் நின்று போதிட வரியவொரு திருவுருவே
கருவுறு துயரமொருவியுன் பாதங்காண நீயருளாய் ஞானநாயகியே. 11

குருமணி மாட கூடங்களோங்கிக் குலவிடுகின்ற விளசையம் பதியில்
திருமணி குயின்ற செப்பொனாலயத்தில் தினமிருந்தொளிருந் தெருள் மணிவிளக்கே
அருமறை முடிவே யடியவரியாளும் அந்தரி ஞானவம்பிகை யுமையே
தெருமரும் பிறவி சிதைத்தெனை யுன்றன் திருவடி சேர்ப்பாய் சிற்ரூபி. 12



கருணையின் வடிவே கதிபெறு மதியே, கருதியதளிக்குங் கருத்துறு கருத்தே
மருணெறி யறுத்துத் தெருளினை யிருத்தி மாண்பினை யளிக்கு மருந்தரு மருந்தே
அருணெறி யளித்தே யிருளினையொழித்து வருளினை யருத்துமரும் பெருமருளே
தெருணெறி யடையத் தெளிவினைக் காட்டுந்தேவியே ஞானநாயகி யுமையே. 13

அன்புருவான வருமறைத்தாயே, யாகத்தை வெறுக்கு மறிவருளறிவே
இன்புருவான வென்னுருவடைய வென்குருவாகி யெழுந்தருளிறைவி
துன்புருவகல நன் மகாவாக்கின் சோதனைப் பொருளாய்த் தோற்றிடுஞ்
நன்மனத்துன்னை நாளுமே போற்ற நன்மதி தருவாய் சோதி ஞானநாயகியே. 14

### ஸ்ரீ ராஜேந்திர ஜோதீஸ்வரர்.

தேசு கொண் முடித்தேவர்மூவர்கள் சித்த விஞ்சைய ராக்கதர்
பேசுகின்னர கருட காந்தர்வ பெருகு தைத்தியராதியோர்
பூஜை செய்துனை நாளும் போற்றிடப் பொற்பமைந்த விளசைவாழ்
ராஜ யிந்திர ஜோதியீஸ்வர நாயகா வெனை யாள்வையே. 15

பூசுரர் மறையாதியோதிப் புகழ்ந்து நாளும் வணங்கிட
ராஜவீரர்கள் ராஜகோபுரம் நாற்புற மதில் மானமே
யாசற மண்டபாதி செய்யவதிற் பொருந்தி யிளசைவாழ்
ராஜயிந்திர ஜோதியீஸ்வர நாயகா வெனை யாள்வையே. 16

தேசெனப் புகல் சித்தொடானந்த சத்துமாகிய தேவனே
யீசனே யிளையான்குடி தனி லென்று மேவிய வைசியர்
பூஜையாதிய வுற்சவங்கள் புரிந்திட மகிழ்ந் தேற்றிடும்
ராஜயிந்திர ஜோதி யீஸ்வர நாயகா வெனை யாள்வையே. 17

பூசகத்திலுன் பூஜைக்கான பொருட்களை நனிநல்கிட
மாசதற்ற தொழிலிதே யென மன்னி வேளாண்மை செய்துறும்
ஆசகன்ற வேளார்நற்கதி மன்னவே யருள் நல்கிடும்
ராஜயிந்திர ஜோதி யீஸ்வர நாயகாவெனை யாள்வையே. 18

ஈசனே சிவநேசனாமென வெண்ணி நாளு மிசைந்திடும்
தூசு வண்ணமே யாதியாக நின் தொண்டருக்கு மளித்தரோ
தேசு மாறுனர் வறுமை யெய்திட விரவிலே வரு மடியராய்
ராஜ யிந்திர ஜோதி யீஸ்வர நாயகாவெனை யாள்வையே. 19

தேசிகா திருத் தேவர் மாலயன் தேடிநாடியுங் காணொணு
வீசனே நீ யடைந்ததாலில்ல மெய்தி நெல்முனை வாரியே
யாசதற்ற வரன்ன மிட்டிட வடியினீழ லளித்தவா
ராஜ யிந்திர ஜோதி யீஸ்வர நாயகாவெனை யாள்வையே. 20

கோச பஞ்சகமான முற்று நற்கோதை மாதர் மயலொடு
நாச முற்ற தனத்தினொடுறு நண்ணு மண்ணாதிணைசையாம்
பாசமான தகற்றி யுன்றனிப்பாத மீதிலணைத்தா நீ
ராஜ யிந்திர ஜோதி யீஸ்வர நாயகாவெனை யாள்வையே. 21

வீசுறுங் துளி கங்கை தங்கிய வேணி யாபுலிப்பாதனுர்
காசறும் பணிக்காலனுர் தொழுக்கடிகொளு மாலவாயினில்
ஆசறும் வெள்ளியம்பலந்தனிலாடி யென்று மிளசைவாழ்
ராஜ யிந்திர சோதி யீஸ்வர நாயகாவெனை யாள்வையே. 22

பாச மோசகனுதி நித்திய பரமனே பரிபூரணு
தேசுறும் பிள்ளைச் சந்த்ர சேகர தேவனே யுமைபாகனே
யாசபாச மகற்றியேயரு ளம்பிகாபதி சம்புவே
ராஜ யிந்திர ஜோதி யீஸ்வர நாயகாவெனை யாள்வையே. 23

பாச மற்றபிமான மிஞ்சிய பண்பதாலுனை யன்றியே
யாசையிற் சுழல் பாசசிலரை யான்னிதம் மிகப் பேணினும்
நீச மற்றுயர் தெய்வநீ யென நினைந்திட வருணல்கியே
ராஜ யிந்திர ஜோதி யீஸ்வர நாயகாவெனை யாள்வையே. 24

ராஜ யிந்திர சோதியீஸ்வர நாயகா வென வோதியே
நேச முற்று வணங்கு மன்பர் நிலத்திலும் மிகுவிண்ணிலும்
ஆசை யுற்றவரும் பொருள்களடைந்து வாழ்வரஃ தன்றியே
ராஜ யிந்திர ஜோதி யீஸ்வரநாதனுர் கழற் சேர்வரே. 25

ஸ்ரீ நடேசர்.

நித்தியானந்த நின்மலா பரிசுத்த போத நிருத்தனே
தத்து வாதீத கர்த்தனே சகலா களாதீத தாண்டவா
முத்தனே முனிவோர்கள் போற்றிடு முதன்மைக் குஞ்சிதபாதனே
பித்தனேனையு மாண்டு கொண்டிடப் பேதியாதருள் — நீதனே. 26

சுத்த பூரண சச்சிதானந்த சோதி நிர்குண நிர்மய
அத்வைத பரபோத சாந்த வசங்க சற்குண தாண்டவா
சுத்தபோத்த வடிவனுயெனைக் கருது நெஞ்சக மாற்றியே
பத்தமுத்த மகன்ற நின்றிருப்பாத பத்தி யளித்திடே. 27



சித்த சுத்தியும், பக்திசித்தமும் சின்மயந்தரு சங்கமும்
சுத்த சற்குரு தத்துவம் பொருள் தோற்று போதகநூலுமே
ஏத்த ஞானமும் சித்தசாந்தியு முடலிலா முத்தி வாழ்வுமே
நித்த மாய்த்தர வேண்டினே னுனை நிர்மலானந்த தாண்டவா. 28

ஸ்ரீ தட்சிணுமூர்த்தி.

ஆல நீழலமர்ந்த காரணு வாரணு பரிபூரணு
நீல நாரண ஞரணன் றொழும் நித்தனே யுயர் புத்தனே
நாலுபேர்க் கொரு நான்மறைப் பொருணல்கு தேசிகா வாசிகா
யேலவே யெளியேற்குமப் பொருளீகுவாய் நலமாகவே. 29

ஸ்ரீ சண்டிகேஸ்வரர்

தந்தை தாளொடு பிறவித் தாளினைத் தடிந்து வெந்தை தரித்திடுஞ்
சிந்தை யாரு நற்றுமமே புனைசீர் பொருந்தியதோர்—பதம்
அந்த மற்ற சண்டீச னென்றா னழைத்திடப் பெற்ற வுத்தம
வெந்தையே யுனையேத்தினேனெனை யிறையவன்
பதஞ்சேர்ப்பையே. 30

திருமால்

பூமாது றைந்திடும் புண்ணிய மார்புடைப் பூரணனே;
நாமாது நாயக னுதியர் போற்றிடும் நாரணனே;
தேமா நறும் பொழில் சூழும் நல்லூரமர் சீதரனே,
கோமானே யென்னை யுமாட்கொள வந்த குருபரனே. 31

குருபரனே யிளங் கோவிகளாங் கொடியிடையார்க்
கொருவரனே யுலகேழையு முண்டிடு முத்தமனே.
திருவரனே திருநல்லூர மர்ந்திடு செங்கணனே
திரு வரனென்றுன தாண்மலரென் முடி சாத்துவதே. 32

நண்ணினு நின்பதம் நண்ணு துறையினு நாயடியேன்
கண்ணியமாக நின்பாதங் கருதக் கருது கண்டாய்,
எண்ணிய வெண்ணிய வெய்த விளசை யிருந்தவர்கள்
புண்ணியமாக வமர்ந்துறை பூமக ணயகனே. 33

### ஸ்ரீ வாள்மேல் நடந்தவம்மன் [துர்க்கை]

திருவே, திருவுடை யந்தணர் போற்றிடுஞ் சிற்பரையே
யருவே, யரிய மறை முடி மேவிய வந்தரியே,
கருவே, கருதரிய வடிவு மடக் கற்பகமே,
மருவே, செறிகுழல் வாண் மேனடந்திடு மாமயிலே. 34

மயிலே, மயலறு மாதவருள்ளமர் மாணிக்கமே,
குயிலே, குயின் மொழிக் கோமளமே, கொடியேனகத்தில்
வெயிலே, வெயிலென வேண்டலர்ச் செற்றிடும் வித்தகியே
வயிலே பொரு விழி [illegible], யாரணியே! 35

112824

Published by Sri P. Sadasivam Chettiar, Secretary,
Ayira Vaisya Mahajana Sangam, Ilayangudi on 28—12—57.
Printed at The Royal Press, Paramakudi.

ஆயிர வைசிய மஹாஜன சங்கம்,
இளையான்குடி.

ராயல் பிரஸ், பரமக்குடி—57.